**SOUTHALL SHUTTERS** (NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

**WEDDING HALL for HIRE**
Hall suitable for Wedding, Birthday Parties, Meetings, Cultural Events, etc. Box Office Facility Availble, more than 500 seats, Standing+Sitting Capacity 600 people, newly furnished,I Floor, Car park, PA System, Kitchen, Water, Toilets, etc. For more details contact 020 8905 7775

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk UN-33 Aug. - Sept. 2003 For News & Advertising: 020 8952 5677 16 பக்கங்கள்

# 150 தமிழ் இளைஞர்கள் கைது

## கோஸ்டி நபர்களுக்கு எதிராக Tamil Task Force

### தலைநகரின் தமிழர் வாழும் முக்கிய பகுதிகளில் பலர் கைது - "Operation Envor"





கைதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பயங்கர ஆயுதங்களுடன் காவல் துறை அதிகாரிகள்

தலைநகரத் தமிழர்களை தலைகுனிய வைத்து வரும் 150 தமிழ் இளைஞர் கோஸ்டி நபர்களை குறிவைத்து Tamil Task Force என்ற பிரிவை மெற்றோ பொலிட்டன் பொலிஸ் அமைத்து உள்ளது. இந்தப் பிரிவு மேற்கொண்ட ஒப்பிரேசன் என்வர் பொலிஸ் நடவடிக்கையில் 45க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு 23 பேரிற்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டு உள்ளது. இலண்டனில் தமிழ் இளைஞர்களின் கோஸ்டி மோதல்கள் அதிகம் உள்ள வெம்பிளி, ஹரோ, குறொய்டன், வோல்தம்ஸ்ரோ, இல்பேர்ட் ஆகிய இடங்களில் இக்கைதுகள் இடம்பெற்று உள்ளது.

தமிழ் வன்முறை - செய்தியாளர் மாநாடு

ஓகஸ்ட் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பொலிஸ் நடவடிக்கையில் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது. செப்ரம்பர் 10ல் ஸ்கொட்லன்ட் யாட் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவை பார்வைக்கு வைக்கப்பட்டன. இம்மாநாட்டில் Deputy Asst Commissioner Stephen House, Det.Chief Superintendent Andrew Murphy ஆகியோர் இந்த இளைஞர்களின் வன்முறை பற்றி விபரித்தனர். DAC Stephen House தமிழர்கள் சம்பந்தப்பட்ட மெற்றோ பொலிட்டன் பொலிஸின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ளார். DCS Andrew Murphy அண்மையில் இடம்பெற்ற கொலை விசாரணைகளுக்கு பொறுப்பாக உள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் :

துப்பாக்கி உட்பட சமையலறைக் கத்தி முதல் வீச்சு வாள் வரை பல்வேறு ஆயுதங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தது. சிறு கத்திகள், பொல்லுக் கட்டைகள், கைக்கோடரி, ஏராளமான வாள்கள், சுத்தியல், இறைச்சிக் கடைகளில் எலும்புகளை வெட்டப் பயன்படுத்தப்படும் கனத்த கத்திகள் என ஆயுதங்கள் குவிக்கப்பட்டு இருந்தது. மேலும் குற்றவாளிகளிடம் கைப்பற்றப்பட்ட கிறடிற் காட்கள், NI நம்பர் என பெருமளவு பிளாஸ்டிக் காட்களும் காட்சியில் வைக்கப்பட்டு இருந்தது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

**World Wide Flights** TTAL
from
Chennai £475 Calcutta £475
Bangkok £385 Dubai £259
Colombo £425 Delhi £485
Colombo to Jaffna R/T £40
SriLankan
Other destinations available plus taxes
March offer 12 days at a Standard hotel in Colombo. Includes B&B airport transfer for £549 pp sharing
Call 0800 093 1411
Email: info@ttal.co.uk
IATA

The International
**Wood Floor Centre**
Laminate Flooring available in 6 colours
£5.95 per sq.m + VAT only or Fully Fitted £24.95 + VAT
Engineered Floors £14.99 + VAT only
Solid Oak Floor £23.50 + VAT only
Free Estimates, Site Surveyor & Free Delivery
Open 7 Days Tel: 020 8951 4395 - 4495 Fax: 020 951 4251
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
www.internationalwoodfloor.co.uk

**Starline**©
தமிழில் பேசி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய
Great Deals on:
* Connections
* Upgrades
* Pay As You Go
* Phone Accessory
* Car kit fittings
* Repairs
T - Mobile
Free Phone: 0500 120 121
Open: 10am - 7pm Mon - Sat & 12 - 6pm Sun
235 The Broadway Southall UB1 1ND

**BIRDY & CO**
Solicitors
Legal Aid + Private
Immigration, Criminal, Landlord & Tenant, Matrimonial
Personal Injury, Civil Litigation, Conveyancing
Tel: 020 8900 9112
Emergency: 07802 436120
606B High Road
Wembley, Middx. HA0 2AF

**Park Royal Cash & Carry**
We are specialists in WINES, BEER, SPIRITS & SOFT DRINKS
Opening Offers: Very special DISCOUNTS for our New & Old Customers
* All Credit Cards accepted
* Free Delivery
* Open 7 Days
Call us on Tel: 020 8838 2233
Fax: 020 8838 0555
29/31, Minerva Road, Park Royal, London NW10 6HJ

Man & Co Estate Agents
Specialists in Sales, Lettings and Financial Services.
Vendors : Properties required for the areas covered by us, competitive commission rates!
We service the London borough of Brent, Harrow, Ealing, Barnet, Hammersmith, Fulham and the Westminster regions.
Landlords : We Offer Guaranteed rent and free management services!
Tenants : Find a suitable accomodation to suit your needs!
உங்கள் வீடுகளை தரமான விலையில் விற்கவும், வாங்கவும், வாடகைக்கு விடவும் ஒழுங்கு செய்து தரப்படும்.
Mortgage எடுக்க கடினமாக உள்ளதா? எந்தவித சூழ்நிலையிலும், எதுவித தடங்கலும் இல்லாமல் செய்து தரப்படும்.
பகுதி நேரம் வேலை பார்ப்பவர்களுக்கும் வேறு நாடுகளில் இருந்த வண்ணம் இங்கு வீடுகள் கடைகள் வாங்க விரும்புவர்களுக்கும் குறைந்த deposit உடன் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
3 Fryent Way, Kingsbury, London, NW9 9ER. 020 8206 9930

TRADE DISCOUNT WAREHOUSES
Craz'zy Prices
MS Mastersupplies
DS Directsupplies
MF Marblefrist
Tiles, Marble, Kitchen, Bathroom, Woodenflooring
Tel: 0208 961 7003 Fax: 0208 961 7039
Unit 21/22/25 Cumberland Business Park, Cumberland Avenue, Park Royal (Off Abbey Road), London NW10 7RT
www.mastersupplies.com Email: info@mastersupplies.com

# 150 தமிழ் இளைஞர்கள் கைது... (தொடர்ச்சி)

இந்த ஆயுதங்கள் இல்பேர்ட் கென்லி றோட்டில் இடம்பெற்ற திலீபன் தங்கவடிவேலின் கொலையிலும் வெம்பிளியில் இடம்பெற்ற கொலையிலும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவை குற்றவாளிகளின் வீடுகளிலும் வீடுகளுக்கு அருகில் உள்ள புதர்களிலும் இருந்து கண்டெடுக்கப்பட்டு உள்ளது.

இலண்டனில் இயங்கும் பல்வேறு செய்தி நிறுவனங்களில் இருந்தும் வந்திருந்த நிருபர்களால் அந்த அறை நிறைந்திருந்தது. அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்த தமது வாழ்நாளில் என்றுமே கண்டிராத அந்தக் கொடிய ஆயுதங்கள் அந்த நிருபர்களுக்கு தமிழ் இளைஞர்களின் கொடிய வன்முறையை பளிச்சிட்டு காட்டியது.

இலண்டன் தமிழர்கள்

"இலண்டனுடன் நீண்ட காலம் தொடர்புபட்டிருக்கும் தமிழர்கள் இந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறார்கள். அவர்கள் கடின உழைப்பாளிகள். கல்வி சார்ந்தவர்கள்." எனக் குறிப்பிட்ட DAC Stephen House ஒரு சிறு பகுதி, 150க்கும் உட்பட்ட நபர்களே இந்த வன்முறையில் ஈடுபட்டு உள்ளதாகத் தெரிவித்தார். தமிழ் மக்களால் மிகவும் கவனம் செலுத்தப்படும் இந்த வன்முறைகளுக்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

தமிழ் பொலிஸார் :

தமிழர்கள் மத்தியில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த தமிழ் பொலிஸார் வேண்டும். எத்தனை தமிழ் பொலிஸார் உங்கள் படையில் உள்ளனர் அதனை அதிகரிக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்து உள்ளீர்கள்? என உதயன் நிருபர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த DAC Stephen House, தற்போது விரல்விட்டு எண்ணக் கூடிய சில தமிழ் பொலிஸாரே இருப்பதாகவும் அதனை அதிகரிப்பதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழர்களின் கருத்து

ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுவது தொலைக்காட்சியில் ·காட்டப்பட்ட போது அது தமிழ் சமூகத்திற்கு அவமானமாக இருந்தாலும், பொலிஸாரின் இந்த நடவடிக்கை வன்முறைகளை கட்டுப்படுத்த மிகவும் உதவும் என கரோவைச் சேர்ந்த தர்மசீலன் நடராஜா (33) உதயனுக்குத் தெரிவித்தார். பொலிஸார் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவது பெரும்பாலும் அனைத்துத் தமிழ் மக்களாலும் வரவேற்கப்பட்டது.

இளைஞர் கோஸ்டிகள் :

கோஸ்டிகள் பற்றித் தெரிவித்த DCS Andrew Murphy, அரியாலை குறூப், றெட் குறூப், ஈஸ்ட்சைட் போய்ஸ் என பல பெயர்களில் இந்த கோஸ்டிகள் இயங்குவதாகவும் ஆனால் இப்பெயர்கள் அடிக்கடி மாற்றமடைவதாகவும் குறிப்பிட்டார். அண்மைய பொலிஸ் நடவடிக்கைகளால் இந்த கோஸ்டிகள் உடைந்து சிதறுப்படுவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். மேலும் இந்த கோஸ்டிகள் கிறடிட் காட் போன்ற மோசடி நடவடிக்கைகளால் தான் தமது வருமானத்தைப் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த கோரமான வன்முறைக்கு குறிப்பான பலமான காரணங்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்த அந்த அதிகாரிகள்; காதலி தொடர்பான பிரச்சினைகள், ஒரு கோஸ்டியை மற்றைய கோஸ்டி முறைத்துப் பார்ப்பது, ஒரு கோஸ்டியின் ஏரியாவினுள் மற்றையவர் செல்வது, சிறு வாய்த் தர்க்கங்களே இவ்வளவு தூரம் பெருப்பிக்கப்படுவதாகவும் அவ்வதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் தங்களை விடுதலைப்புலிகள் என்று இந்த கோஸ்டிகள் கூறுகின்றனர் என்றும் அதில் எந்த உண்மையும் இல்லை என்றும் அவ்வதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அத்துடன் வதிவிட உரிமை மறுக்கப்பட்டவர்கள் குற்றம் செய்திருந்தால் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்பதையும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

தமிழ் இளைஞர்களின் வன்முறையை கட்டுப்படுத்த தமிழ் அமைப்புகள் தவறிவிட்டன

தமிழ் இளைஞர்களுக்கு இடையிலான மோதல்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே ஆரம்பமாகிவிட்டது. ஆரம்பத்திலேயே இந்தப் போக்கை உணர்ந்து அதனை தடுக்கும் எந்த நடவடிக்கையிலும் தமிழ் பொது அமைப்புகள் ஈடுபடவில்லை. மாறாக இப்பிரச்சினை வளர்ந்து வருவதை கண்டும் காணாமல் விடுவதையே இந்த அமைப்புகள் எல்லாம் செய்து வந்தன. இன்று மோதல் நிலையில் இருந்து இலண்டனை உலுக்கும் படுகொலைகளாக இந்த கோஸ்டி மோதல்கள் விஸ்வரூபம் எடுத்து உள்ளது.

ஆரம்பகட்டதிலேயே தமிழ் அமைப்புகள் தலையீடு செய்து நடவடிக்கை எடுத்து இருந்தால் இவ்வளவு மோசமாக இந்த வன்முறை வளர்ந்திருக்க முடியாது. இன்று தமிழ் மக்கள் தமிழ் அமைப்புகளை நம்பிப் பயனில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளார்கள் என்பதுடன் இந்தத் தமிழ் அமைப்புகள் இருப்பதுவும் இல்லாமல் இருப்பதுவும் ஒன்று என்ற நிலை ஏற்பட்டு உள்ளது.

இன்று நாம் தமிழ் அமைப்புகளில் காண்பது அதனை உறுதிப்படுத்துகிறது? தங்களை தர்மகர்த்தா, சமூகத்தலைவர் என்று பீற்றி விட்டு ஆலயத்தில் வன்முறை செய்கிறார்கள். நிர்வாகக் கூட்டங்கள் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் நடத்தப்படுகிறது. இதற்கு இளைஞர்கள் காரணமல்ல. மேலும் ரை கட்டிய இந்தக் கனவான்கள் கல்வி அமைப்புகளிலும் வீடமைப்பிலும் பல்லாயிரம் பவுண் ஊழல்கள் செய்துள்ளனர். இவர்கள் சமூகத்திற்கு வழிகாட்டுவதோ அல்லது சமூகம் இவர்களிடம் உதவி பெறுவதோ சாத்தியமா? இதனால் தான் இந்தத் தமிழ் அமைப்புகளிலும் பார்க்க பிரதான நீரோட்டத்தில் உள்ள அமைப்புகளில் இருந்து உதவிகளையும் ஆலோசணைகளையும் பெறுவது இலகுவாக உள்ளது. இன்று தமிழ் பொது அமைப்புகளிடம் சென்று உதவி பெறுபவர்களின் எண்ணிக்கையிலும்

SAVE £££ POUNDS ON TUITION FEES
VERBAL & NON-VERBAL QUESTIONS ON INTERACTIVE CD
OVER 2000 QUESTIONS for Grammar and Independent School Entries on interactive CD.
Cost £25 includes p&p.
Send cheques or postal orders to:
SCHOOLMATHSCLUB LTD,
BCM 4300
LONDON WC13XX
Enquiries
020 8518 8940
Website: www.schoolmathsclub.com

ATC
ACTON TRAINING CENTRE
FREE TRAINING
for people who live or work in West London
Do you know anyone who needs help with the following:
ENGLISH (ESOL)
LITERACY
NUMERACY
IT COMPUTER SKILLS
NVQ certificate in IT
Tel: 020 8992 4144
email: info@atc-uk.com
Swan House, 298 High Street, Uxbridge Road, Acton, London W3 9BJ
Part Funded by European Union through the European Social Fund

# உதயன் பற்றி...

கடந்த 8 வருடங்களாக வெளிவரும்; அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்ட; தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை உதயன். தமிழ் சமுதாயத்திற்கு பயன் உள்ள வகையில் சமூக நோக்குடன் தேசிய அளவில் வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஒரே தேசிய பிரித்தானிய செய்தி தமிழ் பத்திரிக்கை பற்றி உங்களுக்கு...

பல்லாயிரம் வாசகர்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்ற உதயனை இலவசமாக வாசிக்க அளிப்பவர்கள்:


டாக்டர். இரவிக்குமார் (சற்குரு சுவாமிகள்)
நிறுவனர்-ஆசிரியர்


அன்னை காயத்ரி
நிறுவனர்-துணை ஆசிரியர்


திரு.த.புஷ்பலிங்கம்
விளம்பர பொறுப்பாளர்


திரு.த.ஜெயபாலன்
தலைமை நிருபர்


ர கொன்ஸன்ரைன்
செய்தி ஆய்வு நிருபர்

துணை நிருபர்கள் :
கே அரவிந்தன் (இலண்டன்)
ஜெ வெற்றிச்செல்வன் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கெ பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

மற்றும் :
புலனாய்வு நிருபர்கள், விநியோகஸ்தர்கள்

**உதயன் : அதிக பிரதிகளை பிரசுரிக்கும் பரந்த விநியோகத்தைக் கொண்ட தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிக்கை.**

தொடர்புகளுக்கு: Global News Media **GNM (PVT) LTD.**, 25-27 High St., Edgware, Middx. HA8 7EE **Tel: 020 8952 5677**

**உதயன் நடுநிலைமையை கொண்ட மக்களின் நண்பன். உதயன் எப்பொழுதும் உண்மைகளை மட்டுமே ஒருசார்பற்றமுறையில் பேதமின்றி உண்மைகளை வெளியிடும் ஒரே பத்திரிக்கை.**

The UDHAYAN
உதயன்
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

Katherine & King's College of London
Minavil House, Ealing Road, Wembley HA0 4EL
* Excellent Location: opposite Alperton Tube Station, good transportation links
* Multi-Disciplines: Accounting, Management, Computer, English
* Various Levels: From Certificate to Degree suitable for anyone over 16.
* Flexible Payment Options: Ten Monthly Instalments
* Diverse Study Modes: Full-time, Part-time (Daytime, Evening, Weekend.)
* Starting Date Available All Year Round
Please call 020-8795 1600 for more......
Monday – Friday (9am – 6pm)

Boston College of London
The Best College of the year 2002
Certificate, Diploma, Advance Diploma & PGD in
✓ TTH Travel Tourism & Hospitality Management
✓ Business Administration ✓ ACCA, CAT (Accountancy)
✓ Hotel Management ✓ BBA, MBA, BIT, MIT & PhD
✓ Journalism Management ✓ IT
Accredited by the British Accreditation Council for Independent Further and Higher Education
Boston College of London has been named award winner for the year 2002 in the category of International Education & Training by the UK based Leeds & Yorkshire Times in June 2002.
* Small size classes * Help with visa application & Accommodation
* Highly qualified lecturers * Airport collection facility
15 Leeland Road, West Ealing, London W13 9HH, UK
Tel: 0044-208-8101 888 Fax: 0044-208 8100848
email: info@bcluk.co.uk
Web: www.bcluk.co.uk

பார்க்க அதற்கு வெளியே பிரதான அமைப்புகளிடம் உதவி பெறுபவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம்.

அகதிகளுக்கு உதவுவது, கல்வியில் உதவுவது, வீடமைப்பில் உதவுவது இவைதான் தமிழ் அமைப்புகள் இன்று பெரும்பாலும் செய்து வருகின்றன. ஆனால் அகதிகளுக்கு உதவ நூறு வரையான தமிழ் சட்ட நிறுவனங்கள் உண்டு. கல்வியில் உதவ இலண்டனில் உள்ள பெரும்பாலான கல்லூரிகள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கொண்டவர்களுக்கு விசேட பயிற்சித் திட்டங்களை வைத்துள்ளது. வயது வந்தவர்களுக்கான விசேட கல்வித் திட்டங்கள் ஏராளம் உண்டு. வீட்டு வசதியைப் பொறுத்த வரை தனியார் வீட்டு நிறுவனங்கள் உண்டு. ஆனால் தமிழ் அமைப்புகள் மேற்படி துறைகளில் ஈடுபட முக்கிய காரணம் கஸ்டப்படாமல் பணம் பெற இவை இலகுவான வழிகள்.

தமிழ் அமைப்புகள் செய்ய வேண்டியது சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட, பின்தங்கிய நிலையில் உள்ள மக்களிடம் சென்று அவர்களுக்கு உதவுவது. இன்று புலம்பெயர்ந்த சமூகம் எதிர்நோக்கும் வன்முறை, மனநிலை பாதிப்பு, சமூகத்தால் கைவிடப்பட்ட இளைஞர்கள், சிறை சென்றவர்கள் என்று பல பிரச்சினைகள் இருந்தும் இந்தப் பொது அமைப்புகள் அதில் அக்கறை காட்டவில்லை. தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் இளைஞர்கள் பற்றி யார் அக்கறைப்படுகிறார்கள்? அலுவலகத்திற்குள் இருந்து கொண்டு சட்டை கசங்காமல் பொதுச் சேவை செய்வதாகப் பீற்றிக் கொள்கிறார்கள். வன்முறையில் ஈடுபடும் இளைஞர்களை அழைத்து வந்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவோ, சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவோ, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவோ, வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவோ இந்தப் பொது அமைப்புகள் தயாராகவில்லை.


அகதிகள், கல்வி, வீட்டுத் துறை என்று தமிழர் நலனுக்கு பல மில்லியன் பவுண்கள் செலவிடப்படுகிறது. இதில் நிறைந்த சம்பளத்தைப் பெறும் இவர்கள் சமூக நோக்கில் செயற்படுவதில்லை. இவர்கள் சார்ந்த அமைப்புகளுக்குள் தங்களுக்கு வேண்டியவர்களையே வேலைக்கு அமர்த்தி அவ்வமைப்புகளை குட்டி ராஜ்சியங்களாக வைத்துக் கொண்டு சமூகத்திற்கு சேவை செய்கிறோம் என்ற போர்வையில் தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். இந்நிலை மாற்றப்பட வேண்டும். எத்தனை பொது அமைப்புகளில் கடந்த 5 ஆண்டுகளில் புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொண்டன? அதற்கான முயற்சிகள் செய்யப்படுவதில்லை என்பதிலும் பார்க்க புதிய உறுப்பினர்களை சேர்க்க விரும்பாத நிலைதான் காணப்படுகிறது. இன்று தமிழ் அமைப்புகள் சீரற்ற, திறனற்ற, மோசடியான அமைப்புகள் என்று மக்களால் கருதப்படுவதால் மக்கள் அவற்றில் இருந்து அந்நியப்பட்டே நிற்கின்றனர்.

இந்த நிலையை இவ்வமைப்புகள் மாற்ற விரும்பினால் நிர்வாகம் மாற்றப்பட வேண்டும். புதிய பயன்மிக்க வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். உதவி வேண்டியவர்களுக்கு உரிய நேரத்தில் அவற்றை செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் புதிய உறுப்பினர்கள் தமது உழைப்பை வழங்க முன்வருவார்கள்.

இன்று பிரித்தானியாவில் சிறிதாகவும் பெரிதாகவும் நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புகள் உண்டு. இவ்வமைப்புகள் வன்முறையில் ஈடுபடுவதாக இன்று இனம்காணப்பட்டு உள்ள 150 இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முன்வந்தால் தலைநகர் இலண்டனில் இப்படியான கோரமான வன்செயல்கள் இடம்பெறாது. சமூகத்தால் தனிமைப்படுத்தப்பட்ட ஒதுக்கப்பட்ட இந்த இளைஞர்களை அணுகி அவர்களுக்கு புனர்வாழ்வளிக்க இந்த தமிழ் அமைப்புகள் தயாராக வேண்டும் என பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



கைப்பற்றபட்ட ஆயுதங்கள்


கைப்பற்றப்பட்ட கள்ள கிரடீட் கார்டுகள்

**Restaurant FOR SALE**
Restaurant with full on licence
Next to Tube Station
Within residential area
V.good location
Long Lease
CALL TONI 07973 503836

Excellent position
**Double Unit Vegetarian Restaurant for Sale**
658/660 Kingsbury Road,
London NW9 9HN
Call Yogi
07811 275522

25th ANNIVERSARY

25% OFF EVERYTHING
BRING THIS ADVERT IN AND WE WILL GIVE YOU AN EXTRA 10% OFF
JOYSLEEP
www.joysleep.co.uk
Croydon 020 8830 7670
Edmonton 020 8807 5800
Harlesden 020 8965 1081
Slough 01753 823262
Staples Corner 020 8830 7670
Wembley 020 8903 3278

பிறந்தநாள் மற்றும் சிறு விளம்பரங்களுக்கு
020 8952 5677

**CAM Carpets & Furnitures**
NEWLY OPEN Offers Tel: 8903 7350
BUDGET BED £ 59
ORTHOPAEDIC BED £ 89
Italian DINING Set + 6 Chairs £ 535
& CARPETS
We can beat any quote
424, HIGH ROAD, WEMBLEY

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

SIGN ★ A ★ RAMA
"WHERE THE WORLD GOES FOR SIGNS"
For all your Signage needs
Shop Fascias, Window Graphics, Pavement Boards and much more
0800 634 0096
220 Church Lane, Kingsbury
London NW9 8SN
www.signking.net
ISO 9001 Reg. No. 8876

FURNITURE KING
FREE LOCAL DELIVERY
FREE ASSEMBLEY
3 Door Pine Wardrobe From £199.99
2 Door Pine Wardrobe From £129.99
5+2 Drawer Pine Chest From £89.99
3 Drawer Pine Chest From £29.99
Beds From £69.99
Metal frame complete with sprung mattress,etc.
Dining Sets From £99.99
Nest of Tables, Coffee Tables, Bookcases, Computer Desks, etc. From £29.99
BELMONT CIRCLE, HARROW
020 8931 8686
www.furniture-king.co.uk
30 Watling Avenue, Burntoak,
Tel: 020 8951 5513
info@furniture-king.co.uk



FUNTASIA
The Party Shop
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான
வைபவங்களுக்கும்
தேவையான அலங்கார
சோடனைகளுக்கு நாடுங்கள்
Funtasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM
BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ


Panesar Electrical Co.
SPECIAL OFFER
MK 12 WAY SPLIT FUSE BOX
100 AMP MAIN SWITCH, 80 AMP BCD + 8MC B8
ONLY £85.00




TRACK LIGHT
COMPLETE WITH + SPOT SONLAMPS
ONLY £35.00
CHROME 2GANG SWITCH SOCKET
ONLY £6.50



GE SAS SPLITBOX
100 AMP MAIN SWITCH, BCD + 10 MCBS
ONLY £85.00



BRASS £5.95



364 High Street North,
Manor Park,
London E12 6PH
Tel: 020 8472 1873

SiGN FiT
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road,East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

# ஆசியர் கனவு - அலங்காரக் காட்சி

ஆசியர் கனவு - Asian Dreams என்ற அலங்காரக் காட்சி மே மாத இறுதிப்பகுதியில் இடம்பெற்றது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்நிகழ்ச்சி ஆசியப் பெண்களின் அலங்கார அழகியல் நிகழ்ச்சியாக நடைபெற்று வருகிறது. ஆசியப்பெண்கள் சினிமாத்துறையினூடாக பெருமளவு வெளிப்பட்டபோதும் அலங்கார அழகியலில் மேற்குலகில் அறியப்படாதவர்களாகவே உள்ளனர். மேற்குலகின் பிரதான அலங்கார அழகியல் சஞ்சிகைகளில் இவர்கள் இடம்பெறுவதில்லை என்றே சொல்லலாம்.

ஆடை அலங்காரக் காட்சிகள் அழகியல் விடயங்கள், அழகிப் போட்டிகள் என்பன விபச்சாரத்திற்கு ஒப்பானவை என்ற உணர்வு ஆசியப் பெற்றோரிடம் இன்னமும் காணப்படுகிறது. குறிப்பாக தமிழ் சமூகத்தின் மத்தியில் இவ்வாறான உணர்வு மிக ஆழமாக பதிந்து உள்ளதாக இரு குழந்தைகளின் தாயாரான ரசிதாரணி தெரிவிக்கிறார். தமிழகத்திலும், இலங்கையிலும் முக்கிய நகரப்பகுதிகளில் இந்த ஒப்பனை நிலையங்கள் அல்லது பியுற்றி பார்லர்ஸ் காணப்பட்டாலும் அது பெருமளவில் பரவலடையவில்லை. புலம்பெயர்ந்த நாடுகளிலும் வீடுகளில் வைத்தே இந்த ஒப்பனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால் தமிழ் சமூகத்தில் இவ்வாறான அலங்காரம், அழகியல், ஒப்பனைக் கலைகளில் யாரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தவில்லை. ஆனால் அலங்கார அழகியலில் பத்மாலக்ஷ்மி மட்டும் ஒரு இடத்தைப் பெற்றுள்ளார். சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சால்மன் ருஸ்டியுடன் வாழும் இவர் தமிழ் மூலத்தைக் கொண்டவர் என்பதும் தமிழ் தெரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வைபவங்களுக்கு அப்பால் அலங்காரம், அழகியல், ஒப்பனைக் கலைகள் தமிழர்கள் மத்தியில் சமூக அந்தஸ்தை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை என்கிறார் ரசிதாரணி.

# நவீன பாஸ்போர்ட்டுக்கள் இலங்கையில் அறிமுகம் களவு செய்வதைத் தடுக்குமா?

இலத்திரனியல் நவீன தொழில் நுட்பம் புகுத்தப்பட்ட கடவுச்சீட்டுகள் (பாஸ்போர்ட்) இலங்கையில் முதற் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. ஓகஸ்ட் 4 முதல் இக்கடவுச்சீட்டுகள் பாவனைக்கு வந்து உள்ளது. தெற்காசிய நாடுகள் எவற்றிலும் இல்லாத அளவிற்கு இக்கடவுச்சீட்டுகள் பாதுகாப்பானவை எனத் தெரிவிக்கப்படுகிறது. இக் கடவுச்சீட்டில் மோசடி செய்யவோ அல்லது மாற்றங்கள் செய்யவோ முற்பட்டால் அது அழிந்து போவதுடன் சம்பந்தப்பட்டவர் மாட்டிக்கொள்வார் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள ஆணையாளர் மேர்வின் விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால் கடவுச்சீட்டுக்களுக்கு விண்ணப்பிக்கும் குறிப்பிட்ட நபர் பொய்யான தகவலுடன் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தால் தனக்கு வேண்டிய தகவலுடனேயே கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வழங்கப்படும் அத்தாட்சிப் பத்திரங்களை (பிறப்பு சான்றிதழ், அடையாள அட்டை, நபரை அடையாளப்படுத்தும் கடிதங்கள்) பணம் கொடுத்து வாங்க முடியும் என்ற நிலை இருக்கும் போது நம்பகமான கடவுச்சீட்டுக்கள் சாத்தியமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது. N எழுத்து தொடரில் அச்சிடப்பட்டுள்ள புதிய கடவுச்சீட்டுகள் நவீன தொழில்நுட்பமும் பாதுகாப்புக் குறியீடுகள் அதிகம் கொண்டதுமாக அச்சிடப்பட்டுள்ளது. இக் கடவுச்சீட்டில் மோசடி செய்ய அல்லது மாற்றங்கள் செய்ய முற்பட்டால் அதில் பதியப்பட்டுள்ள தகவல்கள் தானாகவே மாற்றமடையும். (அழிந்து போகும்.)

முன்னைய கடவுச்சீட்டில் புகைப்படம் உட்பட, தகவல்கள், இறுதியில் தடித்த தாளில் உள்ளது. ஆனால் புதிய கடவுச்சீட்டில் புகைப்படம் பாதுகாப்புக் குறியீடுகளுடன் மிகவும் நுணுக்கமாக மெல்லிய தாளில் பதியப்பட்டுள்ளது. மேலும் உரியவருடைய படமும் அதற்கு அருகில் வெற்றுக்கண்ணால் பார்க்க முடியாத நிழல் படம் பதிக்கப்பட்டு உள்ளது. இதில் ஒட்டப்பட்டுள்ள படத்தை மாற்ற முயன்றால் நிழல் படம் அதனைக் காட்டிக் கொடுத்துவிடும். கடவுச்சீட்டின் முக்கிய பல இடங்களில் ஸ்ரீலங்கா என்று அச்சிடப்பட்டுள்ளது. மேலும், நீர்க்கோட்டு அடையாளங்களும் பல வர்ணங்களும் உள்ளடக்கப்பட்டு உள்ளது. கட்டுநாயக்க விமான நிலையக் கணனிகள் குடியகல்வு குடிவரவுத் திணைக்களக் கணனிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு கடவுச்சீட்டுகள் ஆராயப்படும் என்றும் இக்கடவுச்சீட்டுகள் மிகவும் நம்பகமானவை என்றும் அதிகாரிகள் நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றனர்.

விரல் அடையாளங்கள், கண்ணின் ஐரிஸ் அடையாளங்கள் போன்ற தனிநபருக்கு மட்டுமே உரிய விசேட அடையாளங்கள் புகுத்தப்பட்டு அவற்றை ஒப்பிட முடிந்தாலே கடவுச்சீட்டுகள் நம்பகத் தன்மையைப் பெறும் எனவும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். பிரித்தானியாவில் இவ்வாறான கடவுச்சீட்டுகளே அறிமுகப்படுத்தப்பட உள்ளது. உயிரியல் முறையிலான இந்த ஒப்பீடே அடையாள மாறாட்டத்தை அல்லது ஆள்மாறாட்டத்தை தடுக்கும் என பிரித்தானிய அதிகாரிகள் நம்புகின்றனர்.

# தேவாலயங்களின் தெற்காசிய மாநாடு

தெற்காசியாவின் சமாதானமும், பாதுகாப்பும் அதில் தேவாலயங்களின் பங்கும் என்ற மையப்பொருளில் தெற்காசிய நாடுகளின் தேவாலயத் தலைவர்களின் மாநாடு ஒன்று கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. ஓகஸ்ட் 2ம் திகதி முதல் 5ம் திகதி வரை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் ஆகிய நாட்டுத் தேவாலயங்களின் பொதுச் செயலாளர்கள் 15 பேரும் உலக தேவாலயத் திருச்சபையின் மத்திய குழு உறுப்பினர்களும், சமாதான மற்றும் பாதுகாப்பு நிபுணர்களும் கலந்து கொண்டார்கள்.

2002ல் ஜெனீவாவில் நடைபெற்ற உலக தேவாலயத் திருச்சபையின் மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கிணங்க தெற்காசியாவின் சமாதான செயற்திட்டம் ஒன்று கொழும்பு மாநாட்டில் வரையப்பட உள்ளது.

பாதுகாப்பு, சமாதானம் தொடர்பாக தெற்காசிய தேவாலயத் தலைவர்கள் சந்திப்பது இதுவே முதற் தடவை என உலக தேவாலயத் திருச்சபையின் சர்வதேச விவகாரங்களுக்கான நிகழ்ச்சித்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் கிளமன் ஜோன் தெரிவித்துள்ளார்.

# ராமன் கதாபாத்திரம் - மதசர்ச்சை

இராமாயணம் படத்தில் ராமனாக நடிக்கத் தெரிவு செய்யப்பட்ட சல்மன் கானிற்கு கொலைப் பயமுறுத்தல்கள் விடப்பட்டு உள்ளது. சல்மன் கானின் ஜி எஸ் என்ரரைன்மன்ற் தயாரிக்க இருந்த இராமாயணம் படத்திற்கு தானே ராமனாக நடிக்க சல்மன் கான் தயாராக இருந்தார். ஆனால் அப்படத்தை தயாரிக்க வேண்டாம் என்றும் அதில் கானை இராமனாக நடிக்க வேண்டாம் என்றும் கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டு உள்ளது. இப்பயமுறுத்தல்கள் மத அமைப்பினாலேயே விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதனால் அப்படத் தயாரிப்பு தற்போதைக்கு கைவிடப்பட்டு உள்ளது.

பொலிவூட் திரை உலகில் சல்மன் கான் சர்ச்சைக்குரியவராகவே இருந்து வருகிறார். கடந்த ஆண்டு செப்ரம்பர் மாதம் சல்மன் கான் ஓட்டி வந்த வாகனம் விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் வாகனத்தைத் தான் ஓடவில்லை என சல்மன் கான் தெரிவித்தார். மேலும் உலக அழகி ஐஸ்வர்யாராயை காதலித்த சல்மன் கான் தன்னை அடித்து துன்புறுத்தியதாக ஐஸ்வர்யாராய் மன முறிவுக்குப் பின்னர் வழங்கிய செவ்வியின் போது தெரிவித்து இருந்தார்.

# புற்றுநோயைக் குறைக்கும் பீசா

இத்தாலிய உணவான பீசா சமிபாட்டு உறுப்புகளில் ஏற்படும் புற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றது. இத்தாலியின் பிரதானமானதும் முக்கிய உணவு வகையுமான இந்த பிசாக்களில் சேர்க்கப்படும் தக்களி சோசே இந்த புற்றுநோய் கட்டுப்படுத்தலுக்கு காரணம் என அறியப்பட்டு உள்ளது. தக்காளிப்பழத் தோலில் உள்ள Lycopene என்ற அன்ரி ஒக்ஸிடன் இரசாயனப் பதார்த்தமே இந்த புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் உதவுகிறது. தக்காளிப்பழம் சோசாக மாற்றப்படும்போது Lycopene இலகுவாகவும் முழுமையாகவும் உடலால் உள்வாங்கப்படுகிறது.

வாரத்தில் இரு தடவைகள் பீசாவை உணவாகக் கொண்டால் சமிபாட்டு உறுப்புக்களான தொண்டை, சமிபாட்டுக் கால்வாய், குடல் ஆகிய பகுதிகளில் ஏற்படும் புற்றுநோயை கணிசமாகக் குறைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. பிசா உணவில் கொழுப்பு நிறைய இருந்தாலும் புற்றுநோயை அது கட்டுப்படுத்துகிறது. சமப்படுத்திய உணவுப்பழக்கத்தை மேற்கொள்வது உடல்நலத்திற்கு நல்லது.

# பச்சைக் கூரைகள்

புதிய தெருக்கள் அமைக்கப்படுவதாலும் கட்டிடங்கள் கட்டப்படுவதாலும் பச்சை நிலங்கள் பெருகி வருகின்றது என்பது தற்போது பெரும் பிரச்சினையாகி உள்ளது. இதற்கு எமது வீடுகளின் கூரைகளை பச்சையாக்குவது சிறந்த மாற்றுவழி என English Nature தெரிவித்து உள்ளது. சம மட்டமாக்கப்பட்ட கூரைகளில் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதன் மூலம் அருகி வரும் பறவை இனங்களைக் காப்பாற்றுவதுடன் இத்தோட்டங்கள் நீரை உறிஞ்சி வைத்திருப்பதால் வெள்ளமும் கட்டுப்படுத்தப்படுமாம். மேலும் இத்தோட்டங்கள் வீட்டின் ஒரு அடுக்காக அமைவதால் குளிரும், வெப்பமும் நேரடியாக வீட்டைத்தாக்காது. மேலும் பச்சைத் தாவரங்கள் தூசுகளையும், மாசுக்களையும் உறிஞ்சுவதால் சுற்றாடலை சுத்தப்படுத்துகின்றன. அதுமட்டுமல்லாமல் காபனீரொக்சைட்டை அவை உறிஞ்சி ஒக்சிஜனை வெளிவிடுவதால் உலக வெப்பமாதலையும் கட்டுப்படுத்த உதவும்.

இத்திட்டம் இலண்டன் போன்ற நகரங்களுக்கு மிகவும் உகந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இலண்டன் நகரின் நிலப்பரப்பில் 16 வீதம் அதாவது 500,000 ஏக்கர், கூரைகளைக் கொண்டு உள்ளது. இப்பரப்பளவில் புல்லும் செடிகளும் வளர்க்கப்பட்டால் இலண்டன் நகரம் குளிர்மையாகவும் பசுமையாகவும் மாறும்.

# ஐஸ்கிரீமா பேகரா

100 பாகை பரனைற்றுக்கு மேல் சென்ற வெப்பநிலை பலரையும் ஐஸ்கிரீமைச் சுவைக்க வைத்தது. அமெரிக்கப் பாணியிலான இந்த ஐஸ்கிரீம்களில் பேகர்களைக் காட்டிலும் அதிகம் கொழும்பும் கலோரியும் காணப்படுவதாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். Ben & Jerry, Haagen Dazs Sundae Mr Whippy போன்ற அமெரிக்க பாணியிலான ஐஸ்கிரிம்களில் அதிக அளவு கொழுப்பும் கலோரியும் உள்ளதாக நுகர்வோர் எச்சரிக்கப்பட்டு உள்ளனர்.

# சோம்பல்தனம் DVTக்கு வழிகோலும்

பொருளாதார வகுப்பு இருக்கைகளில் (Economy Class) நீண்டதூர விமானப் பயணங்கள் மேற்கொள்ளும் போது ஏற்படும் Deep Vein Thrombosis நோய் தற்போது வீடுகளின் வரவேற்பு அறைகளுக்கும் பரவுகின்றது என அண்மைய அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. ஒரே இடத்தில் நீண்ட நேரம் அசையாமல் இருக்கும் போது குருதி உறைந்து இரத்தம் கட்டியாகி குருதிச் சுற்றோட்டம் தடைப்படுகிறது. இதுவே DVT என அழைக்கப்படுகிறது. குருதி உறைவு உடலின் முக்கிய பகுதிகளில் ஏற்பட்டு சுற்றோட்டம் தடுக்கப்பட்டால் உயிராபத்தும் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

தற்போது இந்த வகை நோய்க்குறி பிரித்தானியச் சிறுவர்களில் ஏற்படுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். சிறார்கள் தொலைக்காட்சிப் பெட்டியிலோ, கணணியிலோ நீண்ட நேரத்தை செலவிடுவதால் அவர்கள் சோம்பலான வாழ்க்கை முறைக்கு தம்மை பழக்கப்படுத்துவதாக அம்மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 5 ஆண்டுகளில் 15 வயதுக்கு உட்பட்டவர்களில் DVT யால் பாதிக்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கை 100 வீதத்தால் அதிகரித்து உள்ளது.

# அதிகரிக்கும் அலர்ஜி (ஒவ்வாமை) நோய்கள்

பிரித்தானியாவில் மூன்றில் ஒருவர் அலர்ஜி நோய்களுக்கு உள்ளாகி உள்ளனர். ஐரோப்பாவிலேயே பிரித்தானியாவில் தான் இது அதிக அளவில் காணப்படுகிறது. அத்துடன் இந்நோய் தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. அண்மையில் வெளியிடப்பட்ட றோயல் கல்லூரி மருத்துவ நிபுணர்கள் வெளியிட்டு உள்ள அறிக்கையில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டு உள்ளது. பொதுவாக இந்த அலர்ஜி நோய்கள் பாதிப்பு குறைந்தவையாக இருந்தாலும் உயிராபத்தான அலர்ஜி நோய்கள் கடந்த 10 ஆண்டுகளில் 7 மடங்கு அதிகரித்து உள்ளது என அந்நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட பதார்த்தங்களிற்கு அலர்ஜி உடையவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. ஈஸ்ற், எலுமிச்சம் பழம், கடலை வகைகள், தூசி, மகரந்தம் என அலர்ஜிக்கான காரணிகளும் பல வகைப்படுகின்றன.

கடந்த 10 முதல் 20 ஆண்டுகளில் அலர்ஜி நோய்களின் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகரித்து இருப்பதாக ஒரு நிபுணர் குறிப்பிடுகிறார். இதற்கு சுகாதாரம், தூய்மை பற்றி கூடுதல் கவனம் எடுக்கப்படுவதும் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. சுற்றாடல் தூய்மையாக இருக்கும் போது உடல் எதிர்ப்பு சக்தியை முழுமையாக விருத்தி செய்வதில்லை என விளக்கமளிக்கப்படுகிறது.

# புகைத்தலை தடை விதிக்க வேண்டுகோள்

இங்கிலாந்தின் பொது இடங்களில் புகைத்தலை தடை செய்யும்படி அரசின் தலைமை மருத்துவ அதிகாரி அமைச்சர்களுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். பொது இடங்களில் புகைத்தலை தடை செய்வதன் மூலம் அடுத்தவர்கள் புகையை உள்ளிழுக்க வேண்டி ஏற்படாது (Passive Smoking), புகைப்பவர்கள் அதனைக் கைவிடவும் தூண்டும் என்றும் இதனால் பல உயிர்கள் காப்பாற்றப்படும் என்றும் சேர் லியம் டொனால்ட்சன் தெரிவித்தார். வன்கூவரில் கொண்டு வரப்பட்ட புகைத்தலுக்கான தடை அங்கு புகைப்பவர்களின் விகிதாசாரத்தை 22 விதத்தில் இருந்து 15 வீதத்திற்கு குறைத்து உள்ளதாக அந்த அதிகாரி ஆதாரத்துடன் குறிப்பிட்டார். பொது இடங்களும் வேலை இடங்களும் புகைப்பதற்கு தடை செய்யப்பட்டால் காலப் போக்கில் புகை பிடிக்காமல் இருப்பது சமூக மதிப்புடையதாகும் எனவும் அவ்வதிகாரி நம்பிக்கை வெளியிட்டு உள்ளார்.

# இனங்கள் கூடிவாழ்வதை ஊக்குவிப்பேன் - தமிழ் மேயர்

இனங்கள் கூடிவாழ்வதை (இனப் பன்முகத் தன்மையை) ஊக்குவிக்கப் போவதாக ஹெரோ மேயர் மனோ தர்மராஜா தெரிவித்து உள்ளார். தொழிற்கட்சி உறுப்பினரான தர்மராஜா 1978ல் இலங்கையில் இருந்து புலமைப்பரிசில் பெற்று பிரித்தானியாவிற்கு புலம்பெயர்ந்தார். தனது சொந்த ஊரைப் பிரிந்தது தனக்கு மனவருத்தம் என்று குறிப்பிட்ட மேயர் இலண்டனை வாய்ப்புகள் நிறைந்த பூமி என்று குறிப்பிட்டார்.

இவர் தெரிவு செய்யப்பட்ட றொக்ஸ்போர்னே கவுன்சிலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்கின்றனர். அப்பகுதித் தமிழர்களுக்கு அவர் குறிப்பிடத்தக்க உதவிகளையும் வழங்கி வருகிறார். தமிழ் பள்ளிகள், ஆலயங்கள் என அவர் உதவிகளை மேற்கொள்வதாக அப்பகுதியில் வாழும் விஜயராகவன் தெரிவிக்கிறார்.

நெல்சன் மண்டேலாவை தன் முன்னுதாரணமாகக் கருதும் மேயர் தர்மராஜா அண்மையில் முஸ்லிம் சமூகத் தலைவர்களால் நடத்தப்பட்ட இலங்கைக்கான சமாதான மாநாட்டை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு சமூகங்களும் வாழும் ஹெரோகவுன்சிலில் பல்லினத் தன்மையை ஊக்கப்படுத்த அவர் உறுதி வழங்கி உள்ளார்.

கிரிக்கட் ஆர்வலரும் இரு பிள்ளைகளுக்குத் தந்தையுமான மேயர் மனோ தர்மராஜா இன்று தனது 61 வயதில் மீண்டும் தனது பொது வாழ்க்கையை ஹெரோ மேயராக தொடர்கிறார். பிரித்தானியாவில் இரண்டாவதாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மேயர் மனோ தர்மராஜா என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் சின்னமணி என்பவர் லூசியம் மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

Taste of Asia
Halal Restaurant and Takeaway
OPEN NEW
* Srilankan Special
* Sunday Buffet only 4.99
* Party Orders
020 8424 2151
3, Masons Avenue, Harrow Wealdstone

BABA Cash & Carry
West London's Finest Specialist in
Beers, Spirits, Wines & Minerals
Tel: 020 8589 0000
Unit 1C, Chailey Industrial Estate
Pump Lane, Hayes, Middx. UB3 3NB

MALIK DOUBLE GLAZING LTD
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome
020 8459 8811
www.malikdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

KUDOS CONTRACT FURNITURE
Quality furniture to suit your budget
Single Bed From £49.95
Double Bed From £79.95
BARGAIN PRICES
Call us on
020 8893 6192
07887720960
357, Uxbridge Road, Southall

QUALITY RIGID KITCHENS
Suppy Only or Suppy & Fit
* Replacement Doors available any size
* Made to measure Bedrooms
* All makes of Appliances
* Trade account welcome

HEATHROW KITCHENS
140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
020 8813 6952

# தமிழருக்கு தலைநகரில் கௌரவம்



விக்ரர் இ செறிபம் சுதந்திரமனிதர் - Freeman ஆக கௌரவிக்கப்பட்டு உள்ளார்.

இலண்டன் கூட்டுத்தாபனத்தால் கௌரவிக்கப்பட்ட செறிபம் ஓய்வு பெற்ற Shipbroker (F.I.C.S) ஆவார். கடந்த 40 ஆண்டுகளாக பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் செறிபம் கொழும்பில் உள்ள அக்கியுனஸ் பல்கலைக்கழகக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

சமூக சேவையில் மிகுந்த ஈடுபாடுடைய செறிபம் பிரித்தானிய தமிழ் சமூக கலாச்சாரக் குழுவின் பொதுச் செயலாளர் ஆவார். மேலும் யாழ் மருத்துவமனை நண்பர்கள் வட்டத்தின் கௌரவச் செயலாளரும் ஆவார்.

# வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு நோர்வே மாணவர்கள் உதவி

மாணவர்களுக்கு மாணவர் கரம் கொடுக்கும் முன்மாதிரித் திட்டம் ஒன்றை நோர்வே மாணவர்கள் முன்னெடுக்க உள்ளனர். $ 4,000,000 களை வடக்கு கிழக்கின் கல்வி மேம்பாட்டுக்கு வழங்க நோர்வே மாணவர்கள் முன் வந்து உள்ளனர். இதற்கான நிதி திரட்டும் நடவடிக்கை ஒக்ரோபர் மாதம் இடம்பெற உள்ளது. 13 - 19 வயது வரையான மாணவர்கள் ஒரு நாள் வேலையிலீடுபட்டு அதனால் கிடைக்கும் வருமானத்தை இந்த உதவி நிதிக்கு வழங்க உள்ளனர். இந்நடவடிக்கைக்கு ஒப்பிரேசன் டேய்ஸ் வேர்க் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே மத்தியத்துவம் வகித்து வர தமது அரசியல் தலைவர்களின் செயற்பாட்டுக்கு அந்நாட்டு மாணவர்கள் தோள்கொடுக்க முன் வந்துள்ளனர். பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் நோர்வேயின் மத்தியஸ்தத்தை கேள்விக்கு உட்படுத்தி வரும் நிலையில் இந்த உதவி முயற்சி அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதே மாதிரியான உதவி நடவடிக்கையை நோர்வெயின் உதவி வெளிவிவகார அமைச்சர் விடார் கெல்கீசன் 1987 - 88 காலகட்டத்தில் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விபத்தைப் பார்த்த மணிரத்தினம்

விபத்தை நேரில் பார்த்த இயக்குநர் மணிரத்தினம் மயங்கி வீழ்ந்தார். இன்னும் தலைப்பிடப்படாத படம் ஒன்றிற்கான படப்பிடிப்பின் போதே இச்சம்பவம் யூலை 10ம் திகதி கல்கத்தாவிற்கு அருகில் இடம்பெற்றது. வேகமான வாகனத்தை துரத்தும் காட்சி படமாக்கப்பட்டுக் கொண்டிருந்த போது நடிகர் விவேக் ஒபிரோயின் மோட்டார் சைக்கிள் விபத்துக்கு உள்ளாகி அவரின் கால் முறிந்துவிட்டது.


இதனைப் பார்த்துக் கொண்டிருந்த மணிரத்தினம் மயக்கமுற்றதை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மணிரத்தினம் மன அழுத்தத்தாலும் உயர் குருதி அழுத்தத்தாலும் பாதிக்கப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# தமிழர்களின் கல்வி ஆய்வுத் தொகுப்பு

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பிரெஞ்சுக் கிளையினர் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட உள்ளதாக அறிவித்துள்ளனர். அக்கல்லூரியின் நிறுவனர் பாவலர் துரையப்பாபிள்ளையின் நினைவாக தொகுக்கப்படும் அந்த நூலில் இலங்கைத் தமிழ் சமூகத்தில் மாணவர்களின் கல்விமுறை, அவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் - ஆய்வுகளை உள்ளடக்கியதான ஆக்கங்களை அவர்கள் எதிர்பார்ப்பதாக அறிவித்துள்ளனர். அதற்கென அவர்கள் ஆறு தலைப்புகளையும் வழங்கியுள்ளனர். அத்தலைப்புகளிலான படைப்புகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் ஓகஸ்ட் கடைசி எனவும் அறிவித்துள்ளனர்.

# பிளவுக்குப் பிந்திய அவைக்காற்றுக்கழகத்தின் மேடையேற்றம்

தமிழ் அவைக்காற்று கழகத்தின் நாடகவிழா - 2003 ஜேர்மனியில் டோட்மென்ற் நகரில் யூலை நடுப்பகுதியில் நடைபெற்றது. பெப்ரவரி 8ல் இலண்டன் லொய்ட்ஸ் பார்க்கில் வெள்ளி விழா மேடையேற்றத்தின் பின்னர் கழகத்தின் முன்னணிக் கலைஞர் கிருஷ்ணராஜாவுக்கும் கலைத் தம்பதிகளான திரு திருமதி பாலேந்திராவிற்கும் இடையே பிளவு ஏற்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது நாடக விழா இதுவாகும். கால் நூற்றாண்டு காலமாக அவைக் காற்றுக்கழகத்துடன் இருந்த தனது உறவு துண்டிக்கப்பட்டது பற்றி கிருஷ்ணராஜா மிகுந்த மனவருத்தத்தை வெளியிட்டு உள்ளார். தனது நண்பருடன் மனம் விட்டுப் பேசிய கிருஷ்ணராஜா ஆழ்ந்த வேதனையை வெளியிட்டதாக அவரது நெருங்கிய நண்பர் உதயனுக்குத் தெரிவித்தார்.



காத்திருப்பு நாடகத்தில்
பா ஆனந்தராணியும் ராஜாவும்

ஓவியம், மேடையமைப்பு, ஒப்பனை, உடைவண்ணம், இசையமைப்பு, பாட்டு, நடிப்பு என பல்வேறு துறைகளில் திறமையைக் காட்டும் ஆற்றல் மிகுந்த கலைஞர் கிருஷ்ணராஜா என பெப்ரவரி 8, 2003ல் வெளியிடப்பட்ட வெள்ளி விழா மலரில் ராஜாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இலண்டன் தயாரிப்புகள் அனைத்திலும் மேடையமைப்பு, உடைவண்ணம், ஒப்பனை என்பவற்றை கிருஷ்ணராஜாவே செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டோற்மண்ட் நாடகவிழாவில் க.பாலேந்திராவால் நெறியாள்கை செய்யப்பட்ட கண்ணாடி வார்ப்புகள், சம்பந்தம், வேருக்குள் பெய்யும் மழை ஆகிய மூன்று நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. தமிழ் அவைக்காற்றுக் கழகம் தனது நாடகங்களை இலண்டன், கனடா, சுவிஸ், நோர்வே, பிரான்ஸ், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மேடையேற்றி பார்வையாளர்களின் பாராட்டை பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒற்றுமையுடன் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இயங்கிய தமிழ் அவைக் காற்றுக்கழகத்தில் ஏற்பட்ட பிளவு தமிழ் நாடகக்கலைக்கு ஏற்பட்ட ஒரு பாதிப்பாகவே கருதப்படுகிறது. 'பிளவுகளும் ஒற்றுமையின்மையும் தமிழ் சமூகத்தின் சாபக்கேடு என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டு உள்ளது' என அதிருப்தியுடன் தெரிவித்தார் நாடக ஆர்வலர் புஸ்பராஜா.

# கிரிக்கட் விளையாட்டில் எதிரணியை தாக்கிய தமிழர்கள் 13 பேர் கைது

பிரான்சில் திங்கள் 14 ம் திகதி ஜுலை 2003, இரவு, Bois de Vincennes என்னும் இடத்தில் நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டு போட்டித் தொடர் பழிவாங்கல் மோதலாக மாறியுள்ளது. சம்பவத்திற்கு முன் தினம் ஞாயிற்றுக் கிழமை விளையாட்டில் தோல்வியடைந்த தமிழர் அணி எதிரணியில் விளையாடிய பாகிஸ்தானியர்களை தாக்கி உள்ளனர். ஏற்கனவே இடம்பெற்ற முறுகல் நிலையின் தொடர்ச்சியாக இத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது.

உடனே பரிஸ் பொலிஸ் திணைக்கழகம் அந்த மைதானத்திற்கு வந்து, 13 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் இலங்கைத் தமிழர்கள் ஆவர். விசாரணையின் பின்னர் அந்த 13 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது குற்றங்கள் பதிவு செய்யப்பட்டதா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இவைபற்றி பிரெஞ் மொழிப் பத்திரிகைகள் முக்கியத்தும் கொடுத்து செய்திகள் வெளியிட்டுள்ளன. அச்செய்திகளில் இலங்கைத் தமிழர்கள் மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளனர். பிரான்சின் தலைநகர் பாரிசில் இருந்து வெளிவரும் லுபாரிசியன் என்னும் நாளிதழ் "It isn't cricket" - "இது கிறிக்கெட் அல்ல" என்று எழுதியுள்ளது. ஒரு விளையாட்டுக்காரனுக்கு சூட்டும் பெரும் குற்றச்சாட்டு இதுவாகும். அதேபோல் "Fair-play" என்கிற சொல் நேர்மையுடன் விளையாடி வரவில்லை என்பதைத் தான் குறிக்கிறது.

'மத சிந்தனை மிக்க அந்த சிறிலங்கா நாட்டைச் சேர்ந்த விளையாட்டுக்காரர்கள் *நேர்மையற்று விளையாடுவது வழக்கமாக* இருந்து வருகிறது' என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் 'இவர்களுக்கு எதிரணியாக விளையாடி வந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த விளையாட்டுக்காரர்களை இவர்கள் அடித்திருக்கிறார்கள்' என அப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

யூலை 13 அன்று பாரிஸ் நகரம் அமைந்துள்ள 'இல் து பிரான்ஸ்' பிராந்தியம் நடாத்திய கிறிக்கெட் போட்டியில் Al Fatah de Villepinte (Seine-Saint-Denis ) - பாகிஸ்தானியர்களின் விளையாட்டு அணியும் Stains (Seine-Saint-Denis) - தமிழர்களின் விளையாட்டு அணியும் கலந்து கொண்டிருந்தது. போட்டியில் Villepinte அணி - பாகிஸ்தானியர்களது அணி வென்றது. அந்த வெற்றி தமிழர்கள் அணியான Stains அணிக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

திங்கள் இரவு Al Fatah de Villepinte மற்றுமொரு போட்டியில் கலந்து கொண்டு விட்டு தங்கள் வாகனங்கள் இருக்கும் இடத்திற்கு செல்லும் பொழுது, மைதானத்துக்கு வெளியே காத்துக் கொண்டிருந்த 50 இலங்கைத் தமிழர்கள் பாகிஸ்தானியர்களை சுற்றிவளைத்து தாக்கி உள்ளனர். அதனை அடுத்து பெரும் சண்டை மூண்டது. இதில் 6 பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் காயப்பட்டார்கள். பாகிஸ்தானியருடைய கார்கள், வண்டிகள் சேதமாக்கப்பட்டது. பாகிஸ்தான் அணியினரை தனிமைப்படுத்தி இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே பாகிஸ்தான் அணியினர், சிறிலங்கா அணியினரை பல தடவை தாக்கி இருப்பதாகவும், பொறுமை இழந்த சிறிலங்கா விளையாட்டு வீரர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர் எனவும் உறுதிப்படுத்தப்படாத ஒரு செய்தி தெரிவிக்கிறது.

ஆனால் கிறிக்கெட் விளையாட்டு, விளையாட்டாக விளையாடப்படவில்லை என்றும் மேற்படி சம்பவம் பாரிஸில் வாழும் ஆயிரக்கணக்கான தமிழர்களை தலைகுனிய வைத்து உள்ளது எனவும் பாரிஸில் வாழும் கிரிக்கட் பிரியர் ரகு தெரிவிக்கிறார்.

# இனவெறியர்கள் தமிழரின் காலை முறித்தனர்

13 ஆம் திகதி நள்ளிரவு பிரான்சின் தேசிய நாள் கொண்டாட்டங்கள் தொடங்கும் வேளையில் இலங்கைத் தமிழர் ஒருவர் இரு இன வெறியர்களால் தாக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் உணவகம் ஒன்றில் பணிபுரிபவர். வேலை முடிந்து, வீடு திரும்புகையில் வழமையாக செல்லும் பஸ்வண்டியை தவற விட்டுவிட்டார். அதனால் அவரது வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்திருக்கிறார். அவரின் பின்னே மழித்த தலையினரான இரு வெள்ளையர்கள் மேலாடை இல்லாது நடந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் போதையிலிருந்திருக்கிறார்கள். அந்த இளம் இலங்கைத் தமிழரை குறி வைத்து அவர்கள் துரத்தி வந்திருக்கின்றனர்.

இதை உணர்ந்து கொண்ட அவர் விரைவாக நடந்து அவர்களுக்குத் தூரமாக செல்ல முயன்றிருக்கிறார். சற்றுத் தூரத்தே சென்று கொண்டிருந்த கறுப்பின இளைஞர்களையும் உதவுமாறு குரல் கொடுத்திருக்கிறார். முயற்சி பலிக்கவில்லை. அந்த மழித்த தலையர்கள் சப்பாத்து கால்களால் அடித்து துவைத்து அவரது வலது காலை முறித்திருக்கிறார்கள். அவர் தெருவில் நடக்க முடியாது வலியால் முனகிக் கொண்டு கிடந்திருக்கிறார்.

இரவு ஒரு மணி அளவில் அயலில் உள்ள யாரோ ஒரு மனிதாபிமானியின் தொலைபேசி அழைப்பின் மூலம் செய்தி அறிந்த அவசர உதவிப்படையினர் முதல் உதவியை அளித்து, அவரை மருத்துமனையில் அனுமதித்திருக்கிறார்கள். இப்போது அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். களவெடுக்கும் நோக்கிலோ, பணம் பறிக்கும் நோக்கிலோ அந்த வெறியர்கள் இயங்கி இருக்கவில்லை, அவர்கள் இன வெறி கொண்டே இந்த கொடும் தாக்குதலை நிகழ்த்தி விட்டு தப்பிச் சென்றிருப்பதாக அவர் தெரிவிக்கிறார்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# இத்தாலிக்கும் ஐரோப்பாவிற்கும் செல்ல இலங்கையில் ஆட்கள் குவிகிறார்கள்

# 1000 பேர் வரை கைது செய்யப்பட்டு உள்ளனர்

கடந்த இரண்டு மாதங்களுக்குள் இலங்கைக் கடற்பரப்பினூடாக இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட 1,000 பேர் வரை கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்தியா, பங்களாதேஸ், பாகிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பாவிற்கு வந்து தம் வாழ்க்கையை வளம்படுத்தும் நோக்கில் தமது தொலைதூரப் பயணத்தை ஆரம்பிக்கின்றனர். சட்ட விரோதமாக இத்தாலியூடாக ஐரோப்பாவிற்கு வருவதற்கு இலங்கை பயன்படுத்தப்படுகிறது என இலங்கைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த ஆண்டு முற்பகுதியில் தென்னாசியர்கள் இலங்கைக்கு வருவதற்கான விசா கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு உள்ளது. இதன்படி இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் நாடுகளில் இருந்து உல்லாசப் பயணிகளாக வருபவர்களுக்கு அவர்கள் நாட்டுக்குள் வரும் போதே விசா வழங்கப்படுகிறது (Entry Visa). இதனால் இலங்கை ஆட்கடத்தல் மையமாக பயன்படுத்தப்படுவதாக இலங்கை அதிகாரிகள் நம்புகின்றனர்.

இலங்கையில் இருந்து செங்கடல் பகுதிக்கு இழுவைப் படகுகளில் கொண்டு சென்று பாரிய கப்பல்களில் ஏற்றி ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

யூலை 24ல் கைது செய்யப்பட்டவர்கள் தங்கள் நாடுகளிலிருந்து சரக்குக் கப்பல்களில் இலங்கைக்கு ஏற்றி வரப்பட்டு உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்த இலங்கையில் உள்ள முகவர் தலைமறைவாகியுள்ளார். இந்தப் பயணத்திற்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை ஒவ்வொருவரிடமும் முற்பணம் அறவிடப்பட்டுள்ளது.

**கைதுகள் :**

யூலை நடுப்பகுதியில் 114 பேர் கண்டியில் உள்ள கடைத் தொகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு உள்ளனர். 83 இந்தியர்களும் 22 பாகிஸ்தானியர்களும் 9 பங்களாதேசியர்களும் கடைத் தொகுதியிலே வைத்து கைது செய்யப்பட்டதாக கண்டி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல தெரிவித்தார்.

யூலை 24 காலை கல்கிசையிலிருந்து கடல் வழியாக சட்ட விரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லவிருந்த 166 தென்னாசியர்களை அப்பகுதிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கல்கிசை சமுத்திராசன்ன பகுதியில் உள்ள வீடுகளிலும், ஹோட்டல்களிலும் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக கல்கிசை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.பி.தயாரட்ன தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்களில் 75 இந்தியர்களும், 29 பங்களாதேசியர்களும், 59 பாகிஸ்தானியர்களும் இருந்தனர்.

அயல் நாடுகளான குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் ஆகிய நாடுகளில் இருந்து நூற்றுக் கணக்கானவர்கள் இலங்கைக்குள் நுழைந்துள்ளதாக நம்பப்படுகிறது. யூலை முற்பகுதியில் மட்டும் 500 பேர்வரை இவ்வாறு வெளிநாடு செல்ல முற்பட்டு கைது செய்யப்பட்டு உள்ளனர். இதற்கு முன்னர் இலங்கை தெற்கு கடற் பகுதியில் கப்பலில் ஏறிய 250 பாகிஸ்தானியர்கள் யூனில் கைது செய்யப்பட்டனர்.

**தொடரும் ஆபத்தான பயணம் :**

இலங்கைத் தமிழர்கள் மேற்குநாடு நோக்கி சட்டவிரோதமாக புலம்பெயர சர்வதேச தலைநகரங்களை தமது நுழைவாயிலாக பயன்படுத்தி வருகின்றனர். சில சமயங்களில் இலங்கையரல்லாதவர்களும் இலங்கையர் என்ற பொய் அடையாளத்துடன் குறிப்பாக பிரித்தானியா வந்து அரசியல் தஞ்சம் கேட்டு வருகின்றனர். தற்போது இலங்கையை நூழைவாயிலாகப் பயன்படுத்தி ஐரோப்பாவிற்குள் நுழைவது புதிய வழியாக அமைந்து உள்ளது. தஞ்சம் கோருவோர்களுக்கு ஐரோப்பா தனது கதவுகளை அடைக்க புதிய வழிகளை அவர்கள் தேட முற்பட்டு உள்ளனர்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இருந்து கப்பலில் இத்தாலிக்குள் வந்து சேரும் இவர்கள் இத்தாலியூடாக ஐரோப்பிய பெரு நிலப்பரப்பிற்குள் பரவிச் செல்கின்றனர் என்பது தெரிந்ததே. இவ்வாறு இத்தாலி நோக்கி வந்த கப்பலில் இருந்து இறங்கி படகுகளிற்கு மாறுகையில் ஏற்பட்ட விபத்தில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 280 பேர் அக்கடலில் மரணித்தனர். அவர்களில் 78 பேர் இலங்கைத் தமிழர்கள் ஆவர். இக்கோர விபத்து 1996 நத்தார் தினத்தன்று இடம்பெற்றது.

# வெளிநாட்டு ஏஜென்சிக் குழு பொலிசில் சிக்கியது

மேற்கு நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பி வந்த குழு ஒன்றை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். 2001ஆம் ஆண்டு நடந்த கொலை ஒன்று தொடர்பாகக் கிடைத்த துப்பு ஒன்றை அடுத்து நுகேகொட கொகிவலையில் உள்ள வீடொன்றை முற்றுகையிட்டு சோதனை செய்த போதே இந்த குழு அம்பலப்பட்டது. பொலிஸார் அங்கிருந்த நால்வரைக் கைது செய்ததுடன் இரண்டு சிறியரக கைத்துப்பாக்கி இரண்டு சொகுசு வாகனங்கள், கணணி இயந்திரங்கள், சிறியரக அச்சு இயந்திரம் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

2001 முதல் இக்குழுவினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக அனுப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இக்குழுவின் ஆண்டு வருமானம் பல கோடிக்கணக்கான ரூபாய்களாக இருக்கும் எனவும் நம்பப்படுகிறது. இவர்களுக்கும் சர்வதேச மாபியாக் குழுக்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பதை அறிய பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சோதனையின் போது கொழும்பில் உள்ள 36 தூதரகங்களினதும் 400 வெளிநாட்டு தூதரகங்களின் விஸா வழங்கும் பிரிவுகளினதும் பெயர்களுடன் ரபர் ஸ்டாம்புகளும், போலியாக அச்சிடப்பட்ட பண நோட்டுகளும், ஏராளம் போலி இலங்கைக் கடவுச் சீட்டுக்கள், பொலிஸ் மற்றும் உயர்கல்வி, தொழில்துறை சான்றிதழ்கள் அரச திணைக்கள ஆவணங்கள், அவற்றுக்குரிய றப்பர் சீல்கள், போலி கல்விச் சான்றிதழ்கள், ஆவணங்கள் உட்பட சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் வேறு வகையான பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சர்வதேசரீதியில் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இக்குழு தொலைபேசி இன்றி செயற்பட்டு வந்துள்ளமை அவர்கள் எப்படி மிகமிக நுட்பத்துடன் செயற்பட்டார்கள் என்பதைக் காட்டி உள்ளது. இவர்கள் மூலம் இலட்சக்கணக்கில் பணம் செலுத்தி மேற்கு நாடுகளுக்கு சென்ற ஆயிரக் கணக்கானோருக்கு தங்களைப் பற்றிய எந்தத் தகவலும் தெரியாமல் நடந்து கொண்டது கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவை ஆச்சரியப்பட வைத்திருப்பதாக குற்றத் தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி சரத் லூகொட தெரிவித்தார்.

# நிலையான சமாதானம் ஏற்படும் வரை

# அவுஸ்திரேலியத் தமிழர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது

போர் ஓய்ந்துவிட்டதால் நிலையான சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்று நம்பி, புலம்பெயர்ந்த தமிழ் மக்களை இப்போதைக்கு இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவிடாதீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, தங்க வடிவேல், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிலிப் றுடொக்கை கேட்டுக்கொண்டுள்ளனர்.

'இலங்கையில் சமாதானத்துக்கான முயற்சிகள் இடம்பெற்று வருகிறது, ஆனால் இன்னமும் சமாதானம் முழுமையாக ஏற்படவில்லை' என்று சுட்டிக்காட்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி விவகார அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா 'அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடிய காலமோ சூழ்நிலையோ இன்னமும் ஏற்படவில்லை' என்றும் 'தொடர்ந்தும் அவுஸ்திரேலியா பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். அவுஸ்திரேலிய அமைச்சர் பிலிப்றுடொக்கை நேரில் சந்தித்த போதே அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் கொழும்பில் உள்ள அவுஸ்திரேலியத் தூதுவரின் இல்லத்தில் யூலை 23 காலை சந்தித்துப் பேசிய போதே; தமிழர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நாட்டில் இன்னும் நிலைமை சீராகவில்லை, இயல்புநிலை திரும்பவில்லை, இடம் பெயர்ந்து உள்நாட்டிலேயே அகதிகளாக இருக்கும் மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குச் சென்று குடியமர முடியாமல் கஸ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்; இந்த நிலையில், புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் இருப்பவர்களை இங்கு திருப்பி அனுப்பிவிட்டால் அவர்கள் எங்கே போய் இருப்பார்கள், என்ன செய்வார்கள் என்று எம்.பிக்கள் அமைச்சரிடம் தங்கள் கவலையைத் தெரிவித்தனர்.

ஏன் சமாதானப் பேச்சுக்களில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா என்று அவுஸ்திரேலிய அமைச்சர் எம்.பிக்களைக் கேட்டுள்ளார். அதற்குப் பதிலளித்த எம்பிக்கள் தமது நம்பிக்கையின்மையை அவுஸ்திரெலிய அமைச்சருக்கு வெளிப்படுத்தினர். நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அவுஸ்திரேலிய அரசு புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் விடயத்தில் மனிதாபிமானத்துடனும் நிதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். நிலையான சமாதானம் ஏற்படும் வரை அவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது என்று எம்.பிக்கள் மீண்டும் அமைச்சரைக் கேட்டுக் கொண்டனர்.

சமாதானப் பேச்சுக்களின் போது; பேச்சுவார்த்தையில் சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும்; நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை மேற்கு நாடுகளில் தஞ்சம் கோரியுள்ளவர்களைத் திருப்பி அனுப்புவதை நிறுத்தும் படி அந்தந்த நாடுகளைக் கோர வேண்டும் என புலம் பெயர்ந்த தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அதற்கு ஆணித்தரமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

# விபத்தில் தமிழ் தம்பதிகளும் ஒரு குழந்தையும் மரணம்

யூலை முற்பகுதியில் கனடாவில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு வாகன விபத்துகளில் மூவர் கொல்லப்பட்டதோடு இருவர் காயமடைந்திருக்கின்றனர். இரு விபத்துக்களிலும் சம்பந்தப்பட்டவர்கள் இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

ரொறன்ரோ, நோர்த்யோர்க் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இறந்தவர்கள் இருவரும் தமிழ் தம்பதிகளாவர். பொன்னம்பலம் நமசிவாயம், மாதவி நமசிவாயம் தம்பதிகளே விபத்தில் கொல்லப்பட்டனர். 10 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையிலிருந்து கனடாவிற்கு இவர்கள் புலம்பெயர்ந்து சென்றனர். பொன்னம்பலம், கனடாவில் பாதுகாப்புத்துறை ஊழியராகக் கடமையாற்றியவர் எனவும் மாதவி மருத்துவ நிலையமொன்றில் தாதியாகப் பணியாற்றினார் எனவும் தெரிவிக்கப்பட்டது. மனைவி மாதவியை காரில் இரவு 11 மணியளவில் பொன்னம்பலம் வேலைக்குக் கூட்டிச் செல்கையில் கார் மற்றொரு காருடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. இருவரும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஒட்டாவாவில் இடம்பெற்ற மறறொரு விபத்தில் காரும் பஸ்சும் மோதிக் கொண்டன. காரில் பயணம் செய்த இலங்கைத் தம்பதிகளின் ஒன்றரை மாதக் குழந்தை மரணமானது. தம்பதிகள் இருவரும் பலத்த காயமடைந்தனர்.

# இத்தாலியில் வேலை செய்ய ஆர்வம் இல்லை

இலங்கையர் ஆயிரம் பேரிற்கு இத்தாலியில் வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதி அளித்து அழைக்கப்பட்டவர்களில் 200 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு உள்ளது. அண்மையில் வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த ராஜபக்ச இத்தாலிக்கு சென்ற போது கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இந்த வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இலங்கையில் இருந்து இத்தாலிக்கு சட்டவிரோதமாக ஆட்களை கடத்தும் நடவடிக்கையை முறியடிக்க இலங்கை அரசு முழுமையாக ஒத்துழைத்ததற்கு நன்றியைத் தெரிவிக்க இந்த வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதாக இலங்கையில் உள்ள இத்தாலியத் தூதுவர் சல்வற்றோர் ஜொற் தெரிவித்திருந்தார்.

For News & Advertising: 020 8952 5677

ADVT.

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1 Importers, Distributors, Wholesalers and Retailers of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**

**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# மலேசிய தமிழ் பிரமுகரின் இலண்டன் வருகை

மலேசிய தமிழ்ப் பிரமுகர் டாத்தோ சகாதேவன் யூலை நடுப்பகுதியில் இலண்டன் வந்திருந்தார். தொலைக் கல்வித் திட்ட பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த இவர் மலேசியத் தமிழ் நூல்களின் நூற்பட்டியல் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக சில முன் முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தார். அண்மையில் வெளியிடப்பட்ட ஈழத்து நூல்களின் விபரப்பட்டியலான நூல் தேட்டம் போன்ற நூல்விபரப்பட்டியல் ஒன்று மலேசியாவிலும் உருவாகி வருகிறது. சர்வதேச தமிழர்களிடையே உறவுப்பாலம் அமைக்க இவ்வாறான இலக்கியப் பாலங்கள் உதவும் என உறுதியாக நம்பப்படுகிறது.

மலேசியாவில் உள்ள தேசிய நிலநிதிக் கூட்டுறவு அமைப்பின் தலைமை நிர்வாகியான டாத்தோ சகாதேவன் மலேசிய இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர். இலண்டனில் ஏப்ரல் 6ம் திகதி இடம்பெற்ற மலேசியத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள இருந்த இவர் மலேசியப் பிரதமருடன் வெளிநாடு செல்ல இருந்ததால் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் பரஸ்பரம் தமக்கிடையே உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் அதற்கு இலக்கியக் களம் மிகவும் உதவும் என்பதும் தற்போது நன்கு உணரப்படுகிறது.

# இலங்கைப் பெண்கள் நாடு திரும்புகின்றனர்

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்ற இலங்கைப் பெண்கள் பலவித இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டதால் நாடு திரும்புகின்றனர். கடந்த ஆறு மாதங்களில் 1,300 பெண்கள் இவ்வாறு நாட்டுக்கு அழைக்கப்பட்டு உள்ளதாக வெளிவிவகார சேவைகள் பிரிவுத் தலைவர் சுசந்த பெர்ணாண்டோ தெரிவித்தார். குவைத்தில் இருந்து 503 பெண்களும் சவுதி அரேபியாவில் இருந்து 406 பெண்களும் திருப்பி அழைக்கப்பட்ட பெண்களுக்குள் அடங்குகின்றனர். மேலும் மத்திய கிழக்கில் திடீர் விபத்துக்களில் இறந்து போன 19 பேரின் சடலங்கள் கடந்த ஆறு மாத காலத்தில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு உள்ளது.


இறையருள் அரசி அன்னை காயத்ரி




வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.

உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பினி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்

020 8952 7775

இந்து தகவல் ஏடு
இரண்டாம் வெளியீடு 2003
மிக அதிக புதிய விளக்கங்களுடன்
விரைவில் வெளிவருகிறது




கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்
இலவசம்
இலவசம்
இலவசம்

BEST TRADE CENTRE
Need a Car ?
Can't get finance ?
WE CAN HELP
No Deposit - Drive away
TODAY in
one of our great cars
NO Application Refused
CALL
020 8514 0988
763 Romford Road, Manor Park E12
Email: info@besttradecentre.co.uk

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS
gifts Souvenirs
and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

Unique Jewellers
Dealers in
22Ct Gold Jewellery, Diamond and White Gold always in Stock.
020-8606 9768
020-8574 3636
79 Western Road, Southall,
Middx. UB2 5HQ
London

RehncyShaheen
Chartered Accountants
www.rehncyshaheen.com

We are Rehncy Shaheen Chartered Accountants, with offices in Middlesex and South London and associates in Tanzania. Our team includes members of the Institute of Chartered Accountants in England & Wales, Chartered Association of Certified Accountants, and Chartered Institute of Taxation.
We provide partner-led accounting and business services formulated to meet the requirements of a wide range of clients. Our philosophy is a personal approach together with a prompt and dedicated attention to our clients' needs.

Our services include
Auditing
•
Cashflow & Management Accounting
•
Client Accounting Services
•
Business Start-Up
•
Back Duty Investigation (Tax & VAT)
•
Taxation

Almost every business decision has a taxation implication, some being short term, others having an effect many years hence. Our special tax department works closely with clients to help them through the maze, planning ahead so that the incidence of tax is minimised.
We are proud of our exceptional success rate in dealing with Back Duty Investigations (both Inland revenue and Customs & Excise) howsoever complicated or involved they may be.

For information:
Mr J S Rehncy MA FCA FCCA CTA AIIT MCMI ACIArb
Middlesex Offices
020 8864 9065 020 8813 8324
1276/1278 Greenford Road, Greenford, Middx. UB6 0HH
Mr A M Shaheen MA LLB ACEA MCMI
South London Office 020 7223 8221
189 Lavender Hill, London SW11 5TB



LONDON
BUILDING
SUPPLIES
Tel: 020 8453 0880

Building Materials
Bricks
Blocks
Plaster
Cement
Sand
Aggregates
Concrete



Decorating Materials
Paints
Tools
Ladders
Doors
Windows
Key Cutting
Protective Clothes

Hard Landscaping Display for your IDEAS
அனைவரையும் வரவேற்கின்றோம்
Abbey Road, Park Royal NW10

# உலக சமாதானத்திற்காகவும் சிறுவர்களின் துயர்துடைக்கவும் உலகசாதனைகள் செய்யும் துடிப்புள்ள தமிழ் இளைஞன்

24 உலக சாதனைகளைச் செய்து சாதனை படைத்த துடிப்புள்ள தமிழ் இளைஞன் சுரேஸ் ஜோச்சிம் தனது 25வது உலக சாதனையை கனடாவில் யூன் 23ல் ஆரம்பித்தார். சிறுவர்களின் துயர்துடைக்க ஆரம்பிக்கப்பட்ட Universal Fund for Suffering Children (UFFORSC) அமைப்பிற்கு நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சுரேஸ் கடந்த 7 ஆண்டுகளில் 24 உலக சாதனைகளைப் புரிந்துள்ளார்.

தனது 25வது உலக சாதனையாக 120 மணித்தியாலங்கள் நிறுத்தாமல் வானொலியில் டி ஜே செய்து சாதனை படைத்துள்ளார். யூன் 23 மாலை 4 மணிக்கு ஆரம்பமான இவரது டி ஜே யூன் 28 மாலை 4 மணிக்கு நிறைவு பெற்றது. கனடாவில் உள்ள கீதவாணி வானொலியிலேயே இச்சாதனை படைக்கப்பட்டு உள்ளது. 2001ல் சுவீடனில் 103.5 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக டி ஜே செய்து



சாதனையாளர் சுரேஸ்

சாதனையாளராக இருந்த Kiritan Bartos என்பவரின் சாதனையை சுரேஸ் 16.5 மணிநேர வித்தியாசத்தால் முறியடித்தார். குழந்தைகளை பாதுகாப்பதற்கும் துயர் துடைப்பதற்குமான செய்தியை உலகிற்குத் தெரியப்படுத்துவதற்காக சுரேஸ் இதனைச் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்டு உள்ள பல மில்லியன் சிறுவர்களைப் பாதுகாக்க கனடாவில் Universal Fund for Suffering Children (UFFORSC) அமைப்பின் மூன்றாவது கிளை யூலையில் கனடாவில் திறக்கப்பட்டு உள்ளது.

யேசு பிறந்த மண்ணான ஜெருசலத்தில் இருந்து அவுஸ்திரேலியா வரை சமாதான தீபம் ஏந்தி, 104 நாடுகளில் உள்ள 180 நகரங்களுக்கு ஊடாக பயணம் செய்வது சுரேசினுடைய முக்கிய நோக்கமாக உள்ளது. டிசம்பர் 24 2005ல் இந்த 30,000 கிலோ மீற்றர் பயணத்தை சுரேஸ் ஆரம்பிக்கத் திட்டமிட்டு உள்ளார். இப்பயணத்தின் போது முக்கிய பிரமுகர்களிடம் சமாதான தீபத்தை இவர் பரிமாறிப் பெற்றுக் கொள்வார். அந்தந்த நாடுகளில் உள்ளவர்கள் தனது பயணத்தில் இணைந்து கொள்ளும்படி சுரேஸ் அனைவரையும் கேட்டு உள்ளார். இந்த சமாதானப் பயணத்தின் மூலம் சிறுவர்களின் துயர் துடைக்க ஒரு பில்லியன் டொலர்களை சேகரிக்க சுரேஸ் திட்டமிட்டு உள்ளார். இது சுரேஸினுடைய பொது வாழ்க்கையில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக அமைய உள்ளது.

இவற்றைவிட இன்னும் சில அதிசயமானதும் ஆபத்தானதுமான சாதனைகளைச் செய்ய சுரேஸ் திட்டமிட்டு உள்ளார். இந்திய பொலிவூட் படம் ஒன்றில் 14 வேடங்களில் நடிப்பது; 27 மணிநேரத்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்தி 3 தடவைகள் கடப்பது; 35 மணிநேரத்தில் மெக்சிகோவில் இருந்து கியூபாவிற்கு நீந்திச் செல்வது; 17 நாடுகளிற்குள் உலங்கு வானூர்தியில் விரைவாக வலம்வருவது என சுரேசின் எதிர்காலத் திட்டங்கள் பரந்து விரிந்ததாக உள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் முன்னுதாரணம் இன்றி வன்முறைகளில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு சுரேஸின் இந்த பொது நோக்குடனான செயற்பாடுகள் நிச்சயம் ஒரு முன்னுதாரணமாக அமையும் என்கிறார் சதாசிவம் எனத் தன்னை அறிமுகப்படுத்திய முன்னாள் குற்றவாளி ஒருவர்.

# ஆனந்தவிகடனின் முன்னாள் துணை ஆசிரியர் இலண்டனில் 'மக்களுக்காகத்தான் இலக்கியம்' - ஜே எம் சாலி

அண்மையில் இலண்டன் வந்திருந்த ஆனந்தவிகடனின் முன்னாள் துணை ஆசிரியர் ஜே எம் சாலியை 31 யூலையில் உதயன் நிருபர், சிஜரிவி கலையகத்தில் சந்தித்து உரையாடினார். இலக்கிய சஞ்சிகைகள் குறுகிய வட்டத்திற்குள் படைக்கப்படுவதில் தப்பில்லை எனக் குறிப்பிட்ட ஜே எம் சாலி, மக்களுக்காகத்தான் இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். இலக்கிய வட்டம் என்ற குறுகிய வட்டத்திற்குள் நிற்பது ஒரு தீண்டாமைப் போக்கை கடைப்பிடிப்பதற்கு ஒப்பானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்னும் இரு ஆண்டுகளில் எழுத்துத் துறையில் நுழைந்து 50 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ள ஜே எம் சாலி தனது துறையில் தொடர்ந்தும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார். கண்ணன் என்ற சிறுபத்திரிகையில் 1955ல் எழுத ஆரம்பித்து, இலண்டன் முரசு பத்திரிகையில் ஆசிரியராகவும், ஆனந்தவிகடனில் துணை ஆசிரியராகவும் பல ஆண்டுகள் பணியாற்றி உள்ளார். தற்போது ஓய்வு பெற்ற நிலையிலும் சிங்கப்பூர் தொலைக்காட்சிக் கூட்டுத் தாபனத்தில் பகுதி நேர செய்தி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

. தஞ்சை மாவட்டம் எறுவாஞ்சேரி கிராமத்தில் பிறந்து தற்போது சிங்கப்பூர் நாட்டு பிரஜையாக வாழந்து வரும் ஜே எம் சாலி, சிங்கப்பூரில் தமிழ் மக்கள் மிகவும் செழிப்புடன் வாழ்வதை சுட்டிக்காட்டினார். ஆனால் அங்கு தமிழ் ஆட்சி மொழியாக இருந்த போதும் தமிழ் மொழியினதும், தமிழ் மக்களினதும் அரசியல் எதிர்காலம் பற்றிக் கேட்கையில் உதடுகளை இறுக்கிக் கொண்டார்.

இது வரை ஏறக்குறைய 400 சிறுகதைகளையும் 30 நாவல்களையும் எழுதியுள்ள இவர் 45க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு உள்ளார். இவரது எழுத்துக்கள் பல்வேறு விருதுகளைப் பெற்று உள்ளதுடன்; சிங்களம் உட்பட வேறு மொழிகளுக்கும் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது.

தொடர்ந்து வெற்றிகரமாக பத்திரிகையையோ சஞ்சிகையையோ வெளியிட,'வர்த்தக நோக்கில் வெளிவருபவையே நீடித்து நிற்கும்' என தனது அனுபவத்தில் இருந்து தெரிவித்தார். நல்ல உணவு எப்படி பல அம்சங்களைக் கொண்டு விருந்தாக அமையுமோ அதே போல் பத்திரிகை சஞ்சிகைகளும் பல அம்சங்களை கொண்டு படிப்பவர்களைக் கவர வேண்டும். படிப்பவர்களுக்கு வெறுப்பாக இருக்கக் கூடாது எனத் தெரிவித்தார். அதனால் தான் இலட்சக்கணக்கான பிரதிகளை விற்கும் ஆனந்தவிகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகள் பலதரப்பட்ட வாசகர்களுக்கும் ஏற்ற வகையில் பல அம்சங்களைக் கொண்டு வெளிவருகின்றன எனத் தெரிவித்தார் ஜே எம் சாலி. தானும் ஜனரஞ்சக எழுத்துக்களையே விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

தமிழ் பத்திரிகை சஞ்சிகைகளில் ஏன் சிறுகதை, கவிதை போன்ற விடயங்கள் சேர்க்கப்படுகின்றன எனக் கேட்டதற்கு அவரது பதில் சுவாரஸ்யமாக அமைந்தது. பத்திரிகை சஞ்சிகைகளை வாசிப்பதில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள் என்பதால் அவர்களைக் கவருவதற்காக சிறுகதைகள், தொடர்கதைகள் சேர்க்கப்பட்டதாக ஜே எம் சாலி தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கூறுகையில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கவிதைகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்றும் பின்னர் பெண்கள் கவிதைகளில் ஆர்வம் காட்ட ஆரம்பித்ததை அடுத்து கவிதைகளும் சேர்க்கப்பட்டன என்றும் கூறினார்.

ஓகஸ்ட் நடுப்பகுதியில் மீண்டும் சிங்கப்பூர் திரும்பவுள்ள ஜே எம் சாலி தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் உறவுகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# ஜேர்மனியில் மாதம் 20 தமிழர்கள் நாடுகடத்தல்

ஜேர்மனியில் இருந்து மாதம் 20 தமிழர்கள் நாடுகடத்தப்படுவதாக இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் கைடோ ஸ்கிறோடர் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்து உள்ளார். உயர் பாதுகாப்பு வலயங்களால் மீளக்குடியமர்வது பாதிக்கப்பட்டு உள்ளதா என்பதை நேரடியாக ஆராய யாழ் சென்றுள்ள ஸ்கிறோடர் அங்கு இத்தகவலை வெளியிட்டு உள்ளார். ஜேர்மனியில் தஞ்சம்கோரியுள்ள தமிழர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் நிராகரிக்கப்பட்டவர்கள் மாதம் 20 பேர் வரை நாடுகடத்தப்படுவதாகவும் ஸ்கிறோடர் தெரிவித்து உள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜேர்மனியில் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழர்கள் பிரித்தானியாவிற்கு வந்து சேர்ந்தனர். ஆனால் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்தவர்களை Assylum Shoping என்று முத்திரையிட்டு அவர்களுக்கு எதிராக பிரித்தானிய உள்துறை அமைச்சு கடுமையான நடவடிக்கை எடுத்தது. அப்படியானவர்களின் தஞ்சம் நிராகரிக்கப்பட்டு அவர்கள் ஜேர்மனிக்கே திருப்பி அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவதாக தமிழ் சட்டத்தரணிகள் நம்புகின்றனர்.

இதில் இருந்து தப்புவதற்காக சிலர் தலைமறைவாக வாழ்கின்றனர். இன்னும் சிலர் கனடாவிற்கு சென்றுள்ளனர்.

# அறிவிப்பாளர் திருப்பி அனுப்பப்பட்டார்

தமிழ் ஒலி பரப்புக் கூட்டுத் தாபனத்தின் (ரி பி சி) முன்னணி அறிவிப்பாளர் ரமணன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார், யூலை 25 வெள்ளி அன்று குடிவரவு அதிகாரிகளால் நேர்காணலிற்கு அழைக்கப்பட்ட ரமணன் தடுத்து வைக்கப்பட்டு மறுநாள் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். தடுத்து வைக்கப்பட்டிருந்த போது வானொலிக் கலையகத்திற்கு தொடர்பு கொண்டு தான் மறுதினம் அனுப்பப்பட உள்ள செய்தியைத் தெரிவித்து உள்ளார். ரமணனைத் திருப்பி அனுப்புவதை தடுப்பது கடினம் என்ற நிலையில் அவரது சட்டத்தரணி கைவிரித்து விட்டார். இறுதியில் தனக்கு அவசியமான சிலவற்றை தனது நண்பர்கள் மூலம் எடுத்துக் கொண்டு அவர்களிடம் இருந்து கண்ணீருடன் விடைபெற்றார். ரமணன் பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டு மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னணி அறிவிப்பாளரான ரமணன் இல்லாதது அவ்வானொலி நிலையத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பாக அமைந்தது. சில நெருக்கடிகளும் ஏற்பட்டது. இத்திடீர் நெருக்கடியால் தனது உறவினரின் திருமணத்திற்குச் சென்றிருந்த வானொலியின் நிறுவனர் ராம்ராஜ் அவசர அவசரமாக இலண்டன் திரும்பினார். பல நெருக்கடிகளையும் சந்தித்த எமக்கு இது இன்னுமொரு நெருக்கடி என அவர் உதயனுக்குத் தெரிவித்தார். தொடர்ந்தும் ரி பி சி வானலைகளில் தவழ்ந்து வரும் என்று தம் நேயர்களுக்கு ராம்ராஜ் நம்பிக்கை தெரிவித்தார்.

# கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகம் - யாழ் நூலகம

கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகம் நூல்களை விஞ்ஞானரீதியில் பிரித்து ஒழுங்குபடுத்துவது மற்றும் பதிவு செய்வது தொடர்பான விதிகள் பற்றிய நூல்களின் (Dewey 21 Classification Scheme and AACR2 Cataloguing Rules) மும்மூன்று பிரதிகளை யாழ் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்து உள்ளது. இறுதியாக வெளிவந்த பதிப்பான இந்நூல்களின் விலை £850 (ஒரு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் ரூபாய்) ஆகும்.

யூலை 31ல் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தின் Learning Resource Centreல் இடம்பெற்ற சிறிய சந்திப்பில் யாழ் நூலக நண்பர்கள் வட்ட பிரதிநிதிகளிடம் இந்நூல்கள் கையளிக்கப்பட்டன. யாழ் நூலக நண்பர்கள் வட்டப்பிரதிநிதிகள் கவுன்சிலர் போல் சத்தியநேசன், வி சிவலிங்கம், த ஜெயபாலன் ஆகியோர் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகப் பிரதிநிதி Ms Judith Anne Preece இடம் இருந்து இந்நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

Rising From The Ashes - Tragic Episode of The Jaffna Library என்ற யாழ் நூலகம் பற்றிய வரலாற்று ஆவணத்தின் 5 பிரதிகளை யாழ் நூலக நண்பர்கள் வட்டப் பிரதிநிதிகள் கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தின் தகவல் சேகரிப்புப் பிரிவிற்கு அன்பளிப்புச் செய்தனர். இந்நூல் கடந்த யூன் முதலாம் திகதி யாழ் நூலக எரிப்பின் 22வது ஆண்டு நினைவு நாளில் வெளியிடப்பட்டது. இதில் கலந்து கொண்ட கலாநிதி மேரி டேவிஸ், கிழக்கு இலண்டன் பல்கலைக்கழக Director of Learning; யாழ் நூலகத்திற்கு பல்கலைக் கழகம் உதவும் என்று உறுதி அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கலாநிதி மேரி டேவிஸ் புளோரிடாவில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்றமையால் உத்தியோகபூர்வமான கையளிப்பு நிகழ்வில் அவர் கலந்து கொள்ளவில்லை. இலங்கையிலே பெரும்பாலும் யாழ் நூலகத்தில் மட்டுமே மிக அண்மைய பதிப்பான இந்நூல்கள் கிடைக்கும் எனத் தெரிவித்த யாழ் நூலக நண்பர்கள் வட்ட ஒழுங்கமைப்பாளர் என் செல்வராஜா யாழ் நூலகம் இவ்வளவு செலவில் இந்நூலை வாங்குவது முடியாத விடயம் என்று கூறினார். யாழ் நூலகத்தின் சர்வதேச இணைப்பாளரும் ஆன இவர் கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்திற்கு தன் நன்றியைத் தெரிவித்தார்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# நியூமோல்டனில் தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டனர் பொலிஸார் கண்துடைப்பு - பாதிக்கப்பட்டவர்கள்

யூலை 20ம் திகதி மூன்று தமிழ் இளைஞர்கள் 15 - 20 வரையான வெள்ளையின இளைஞர் கும்பலால் தாக்கப்பட்டனர். ஒருவருக்கு மண்டையிலும் மற்றைய இருவருக்கும் முகத்திலும் காயங்கள் ஏற்பட்டது. போத்தலை உடைத்து குத்துவதற்கு வந்த போது தூரத்தே கேட்ட பொலிஸ்காரின் சமிக்ஞையைக் கேட்டவுடன் கும்பல் சிதறி ஓடியது. அதிஸ்டவசமாக பாரதூரமான காயங்கள் ஏற்படாமல் இவ்விளைஞர்கள் தப்பித்தனர். இவர்களது காயங்களுக்கு முதலுதவி வழங்கப்பட்டது.

மயூ, கரன், மதன் ஆகியோரே இவ்வாறு தாக்கப்பட்டனர். (இவை அவர்களது சொந்தப் பெயர்கள் அல்ல.) விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமை மாலை நியூமோல்டனில் உள்ள மதனின் வீட்டிற்கு முன்னால் இருந்து மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந்த இந்த நண்பர்களை வெள்ளையினத்தைச் சேர்ந்த இளைஞர்கள் காரணம் எதுவும் இன்றித் தாக்கிவிட்டு தப்பி ஓடி உள்ளனர். இச்சம்பவம் மாலை 7.15 மணியளவில் இடம்பெற்றது. சம்பவம் நடந்து 10 நிமிடங்களிற்குள் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

**பின்னணி :**

மதனின் வீட்டிற்கு முன்னால் இருந்து மூவரும் உரையாடிக் கொண்டிருந்த போது அவர்களை நோக்கி ஐந்தாறு வெள்ளை இளைஞர்கள் வந்தனர். வந்தவர்கள் தமிழ் இளைஞர்களிடம் பணம் கேட்டு உள்ளனர். தமிழ் இளைஞர்கள் இல்லை என்று மறுத்தனர். அதனைத் தொடர்ந்து வெள்ளையின இளைஞர்களில் ஒருவன் Where are you come from? என்று ஆணவத்துடன் கேட்டான். வெள்ளையின இளைஞர்கள் Where is your car? Where is your house? என்று தமது கேள்விகளை அடுக்கிக் கொண்டு சென்றனர். அவர்கள் கேட்ட முறையால் வெறுப்படைந்த தமிழ் இளைஞர்கள் We don't want to tel you? என்று இறுக்கமாகப் பதிலளித்தனர.

அதனை அடுத்து வெள்ளையின இளைஞர்கள் தமிழ் இளைஞர்களைத் தாக்க ஆரம்பித்தனர். பதிலுக்கு தமிழ் இளைஞர்களும் தாக்கினர். தமிழ் இளைஞர்கள் திருப்பி தாக்க ஆரம்பித்ததும் மேலும் 10 முதல் 15 வரையான வெள்ளை இளைஞர்கள் ஓடிவந்து தமிழ் இளைஞர்களைத் தாக்கினர். மூன்று பேரை 15 - 20 பேர் மிருகத்தனமாகத் தாக்கினர். அடுத்து வெள்ளையின இளைஞன் ஒருவன் போத்தலை உடைத்து குத்துவதற்கு வந்தான். அப்போது தூரத்தே பொலிஸ் காரின் சமிக்ஞை ஒலி கேட்கவே தாக்கவந்த வெள்ளையின இளைஞர் கும்பல் சிதறி ஓடியது.

**பொலிஸார் எங்களை குற்றவாளியாக்குகின்றனர் :**

சம்பவம் நடந்த 10 நிமிடங்களிற்குள் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். பொலீஸ் தங்களை விசாரித்த முறை வெறும் கண் துடைப்பாக இருந்ததாக மயூ குற்றம்சாட்டினார். பொலிஸார் நாங்கள் ஏதோ தவறு செய்ததாக எங்களை விசாரித்தது மட்டுமல்லாமல் நாங்கள் தற்பாதுகாப்பிற்காக தாக்கியதை பெரிதுபடுத்தியதாக மயூ மேலும் குறிப்பிட்டார். பொலிஸார் விரைந்து செயற்பட்டு இருந்தால் தாக்கியவர்களை கைது செய்திருக்கலாம் என சம்பவம் பற்றி விபரித்த மயூ தெரிவித்ததுடன்; இதனை இனவாதத் தாக்குதலாக கருதிச் செயற்பட பொலிஸார் அக்கறை காட்டவில்லை என்றும் தெரிவித்தார்.

பொலிஸார் தமிழ் இளைஞர்களை தமது காரில் ஏற்றிக் கொண்டு அப்பகுதியில் தாக்கியவர்களைத் தேடினர். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை.

# நிதி திரட்ட பொங்கியது பொழுது

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பொங்கும் பொழுது - 2003, யூலை 5ல் வெம்பிளி உயர் பள்ளியில் இடம்பெற்றது. இவ்விழாவில் திரட்டப்பட்ட நிதி கல்லூரியின் கணணித்துறையை வளம்படுத்த பயன்படுத்தப்பட உள்ளது. சிறப்புரைகள், நாடகம், இசை என நிகழ்ச்சிகள் இனிமையாக இருந்ததாக கலந்து கொண்ட பழைய மாணவர் தயாநிதி உதயனுக்குத் தெரிவித்தார். இரண்டாவது ஆண்டாக இடம்பெற்ற பொங்கும் பொழுது நிகழ்ச்சியின் ஒழுங்கமைப்பு ரவீந்திரமோகன் தலைமையில் நடைபெற்றது. குமாரராஜன் தொடர்ந்தும் பழைய மாணவர் அமைப்பின் தலைவராக உள்ளார்.

சில மாதங்களிற்கு முன் இவ்வமைப்பு சில நெருக்கடிகளுக்குள் சிக்கிய போதும் பொது நலனை கருத்திற்கொண்டு இப்பொங்கும் பொழுது சிறப்புற நடத்தப்பட்டதாக ஏற்பாட்டுக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். 'இனிவரும் சங்க எலெக்ஷனில் எமது பாடசாலையின் நன்மையை கருதி பல வேறுபட்ட திறமை உள்ளவர்களும் நேர வசதி உள்ளவர்களும் தெரிவு செய்யப்பட்டு பாடசாலையை முன்னேற்ற வேண்டும்' என குமாரராஜன் தலைமைச் செய்தியில் தெரிவித்தார். 'பெருமைக்குரிய கல்லூரியை காலத்தின் கோலத்தால் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது கடன்' என்றார் விழா ஏற்பாட்டுத் தலைவர் ரவீந்திரமோகன்.

# வெளிநாட்டவர்களின் விசா நீடிப்புக்கு £250

பிரித்தானியாவில் வெவ்வேறு காரணங்களுக்காக தங்கி இருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகள் தங்கள் விசா நீடிப்புப் போன்று குடிவரவுச் சேவைகளுக்கு கட்டணம் அறிவிடப்பட உள்ளது. இப்புதிய நடைமுறை ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. இப்புதிய கட்டணம் அறவிடும் திட்டத்தால் £90 மில்லியன் சேமிக்கப்பட இருக்கிறது. இப்புதிய நடைமுறைப்படி ஒரே நாளில் விசா நீடிப்பை மேற்கொள்ள £250 அறவிடப்படுகிறது. தபால் மூலம் விண்ணப்பிக்க £155 அறவிடப்படுகிறது.

கட்டணம் அறவிடும் முறை விண்ணப்பங்களை செயற்திறனுடனும் விரைவாகவும் பரீசீலிக்க மிகவும் உதவும் என உள்நாட்டு அலுவலக அமைச்சர் பெவ்ரலி கியூச் தெரிவித்தார். விசா நீடிப்பு - application for an extension of stay, தங்கும் ஏற்பாடு - application for settlement, புதிய கடவுச் சீட்டில் நிரந்தர வதிவிட முத்திரை பதிப்பித்தல் - permanent residency stamps being put in new passport ஆகியவற்றிற்கு கட்டணம் அறவிடப்பட உள்ளது.

தஞ்ச விண்ணப்பதாரர்களுக்கும் ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகளுக்கும் இக்கட்டணங்களில் இருந்து விலக்களிக்கபட்டு உள்ளது. வேலை அனுபதிப்பத்திர விண்ணப்பங்களுக்கும் காலபோக விவசாயத் தொழிலாளர்கள், சிறப்புத் தேர்ச்சி பெற்ற குடிவரவுத் திட்டத்தில் வருபவர்களுக்கும் கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது என உள்துறை அமைச்சு தெரிவித்த உள்ளது.

# பிரித்தானியா குடியேறுபவர்களை வரவேற்க வேண்டும்

பிரித்தானியா குடியேறுபவர்களை வரவேற்று அவர்கள் சுமுகமாக வாழ வழி செய்து கொடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஆணைக்குழு கேட்டு உள்ளது. ஐரோப்பியாவில் உழைக்கும் சனத்தொகை வீழ்ச்சி அடைவதால் அந்த வெற்றிடத்தை நிரப்ப வெளிநாடுகளில் இருந்து மக்கள் அவசியம் உள்வாங்கப்பட வேண்டும் என புதிய கொள்கை நகலில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. 2010 இன் பின் இந்த உழைக்கும் மக்கள் தொகை சுருங்கிச் செல்லும் என அதில் எதிர்வு கூறப்பட்டு உள்ளது.

புதிதாகக் குடியேறுபவர்கள் வேலைவாய்ப்பைப் பெறவும், பாரபட்சத்திற்கு எதிராகப் போராடவும், பிரதான சமூக நீரோட்டத்தில் இணையவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என அப்புதிய கொள்கைத் திட்டம் குறிப்பிடுகிறது.

குடியேறுவதைத் தடுப்பது ஒரு தெரிவு இல்லை என்று குறிப்பிடும் வேலைவாய்ப்பு - சமூக ஆணையாளர் ஐரோப்பாவில் ஏற்கனவே தளம் அமைத்துள்ள குடியேற்றக்காரர்களை சமூக இணைவாக்கத்திற்குள் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஏதிர்கால குடிவரவிற்கு இப்போதே தயாராக வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஆனால் தஞ்சம் கோருபவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியே இருந்து தஞ்ச விண்ணப்பம் செய்ய வேண்டும் என உள்துறை அமைச்சு முன் வைத்த திட்டத்தை ஐரோப்பிய ஆணைக்குழு ஆதரித்து உள்ளது. இத்திட்டத்தை இவ்வாண்டு முடிவில் பரீட்சார்த்தமாக அமுல்படுத்த உள்ளதாக உள்துறை அலுவலக அமைச்சர் பெவ்ரலி கியூச் தெரிவிக்கிறார்.


SMART MORTGAGE GROUP
We specialise in *Mortgages* for the Self-Employed and Company Directors.
We need a minimum of 10% Deposit and No proof of income.
Call on 08000 811911
460 Uxbridge Road, Hayes, Middx. UB4 0SD
www.smartmortgagegroup.co.uk

UDHAYAN HOT NEWS CALL 020 8952 5677

MANAKTALA &CO.
Chartered Accounts
* Tax / VAT Return
* Accounts / Auditing
* Any needs for Accounts Purpose
Call Me
MR. PRADEEP MANAKTALA F.C.A, M.Sc.
on
Tel: 020 8579 7333
Fax: 020 8566 2028
Barclays Bank Chambers,
17 Leeland Mansions,
Leeland Road, West Ealing,
London W13 9HE

J K SHAH
Chartered Certified Accountants & Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

K.M.S. Accountants
For FREE Consultation on Self Assessment Returns, CIS25 refunds, Financial Accounts for Limited Companies/ Sole Traders, Company Formation, VAT, PAYE & Book-keeping Services
Tel: 020 8503 3375
Email: kms_group@hotmail.com

BHANOT & CO.
Chartered Accountants
A COMPLETE RANGE OF SERVICES AT REASONABLE RATES
TAX
AUDIT
FINANCE
PENSIONS
MORTGAGES
BOOK-KEEPING
CASH-FLOWS
ACCOUNTS
PAYROLL
PLANS
VAT
020 8840 8844
Email: anil@bhanot.co.uk

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# சுரேஸ்குமார் செல்வராஜாவின் கொலை வழக்கில் இரு கொலையாளிகளுக்கு ஆயுள் தண்டனை

சச்சிதானந்தன் ராகுல் (26), நாகராசா சிவக்குமார் (33) ஆகியோர் சுரேஸ்குமார் செல்வராஜாவை (26) படுகொலை செய்தமை வடக்கு இலண்டன் ஓல்ட் பெயிலி கிரிமினல் நீதிமன்றத்தில் ஓகஸ்ட் முற்பகுதியில் நிருபிக்கப்பட்டது. மார்ச் இறுதிப் பகுதியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கில் கொலையாளிகள் இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. கொலைக்கு உடந்தையாக இருந்து கொலைமுயற்சியில் ஈடுபட்டதற்காக கனகநாயகம் (31) என்ற மற்றுமொரு குற்றவாளிக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

இதே வழக்கில் கொலையாளி சச்சிதானந்தன் சின்னையா சத்தியசிவம் என்பவரைக் கடத்தியதும் நிருபிக்கப்பட்டது. குமாரவேல்சிங்கம், கனகநாயகம் ஆகிய இரு குற்றவாளிகளும் வன்முறையில் ஈடுபட்டதாகவும் குற்றவாளி குமாரவேற்பிள்ளை (37) உடற்காயங்களை ஏற்படுத்தியதாகவும் நிருபிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டது.

அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி (25), சுபேந்தர் இராமச்சந்திரன் (18) ஆகிய இரு இளைஞர்களையும் கொலை செய்த வெம்பிளி, செட்ஸ்வேர்த் அவெனியூவில் வசித்த இரட்டைக் கொலையாளி செந்தமிழ் தில்லைநாதனுக்கு (22) யூன் 9ல் இரட்டை ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது தெரிந்ததே.

இவ்வழக்குகள் விசாரணைக்கு உட்பட்டு இருந்த காலப் பகுதியில் மார்ச் 19, 2003ல் இல்போர்ட் ஹென்லி வீதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த திலீபன் தங்கவடிவேல் (23) ஜுன்டா என்ற இளைஞர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார். மேலும் யூன் 8ல் பார்த்தீபன் பாலசிங்கம் என்ற இளைஞர் வெம்பிளியிலும், கிசோக்குமார் பாலச்சந்திரன் என்ற இளைஞர் இல்பேர்ட்டிலும் ஒரு மணிநேர இடைவெளியில் கோரமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

### சுரேஸ்குமார் செல்வராஜா கொலை :

சுரேஸ்குமார் செல்வராஜா 2002 ஏப்ரல் 22ல் லையன் பார்க் அவெனியூவில் உள்ள தனது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வழக்கு வெம்பிளியில் இடம்பெற்ற மூன்றாவது கொலை வழக்காககும். இக்கொலை தொடர்பாக 19 முதல் 40 வயது வரையான 13 இலங்கைத் தமிழர்கள் அப்பகுதியில் இருந்த இரு முகவரிகளில் இருந்து கைது செய்யப்பட்டனர். ஒருவர் வெம்பிளி நோர்த் சேச் றோட்டிலும் மற்றும் பன்னிருவரும் பிரன்ட்வலே அவெனியூவில் இருந்தும் கைது செய்யப்பட்டனர். அங்கிருந்து அச்சமயம் இரு வாள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

### குற்றவாளிகள் :

சுரேஸ்குமார் செல்வராஜா கொலையில் பிரன்ட்வலே அவெனியூவைச் சேர்ந்த ராகுல் சச்சிதானந்தன் (26), நோர்த் சேச் றோட்டைச் சேர்ந்த நாகராஜா சிவக்குமார் (33) ஆகியோர் பிரதான கொலையாளிகளாக நீதிமன்றால் காணப்பட்டனர். ராகுலே அரியாலை கோஸ்டியின் தலைவர் என இனம் காணப்பட்டது. பிறஸ்போர்ட் அவெனியூவைச் சேர்ந்த திருராஜா கனகநாயகம் (26), , றுஸ்ச்குறொவ் றோட்டைச் சேர்ந்த விஜய் குமாரவேல்சிங்கம் (31) ஆகியோர் இக்கொலையில் சம்பந்தப்பட்ட ஏனைய குற்றவாளிகள்.

### மன்னார் - அரியாலை கோஸ்டி மோதல் :

அரியாலை கோஸ்டி மன்னார்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மீது கடுமையான வெறுப்பையும் வஞ்சத்தையும் கொண்டிருந்ததாகவும், பிரித்தானியாவுக்கு வரும் போது அவர்கள் இந்த வஞ்ச உணர்வுகளையும் கொண்டு வந்ததாகவும் அரசதரப்பு சட்டத்தரணி கியூசி ஜோன் □ில்டன் நீதி மன்றில் கொலையின் பின்னணியை விளக்கினார். அவர் தொடர்கையில் 2001ல் அரியாலையைச் சேர்ந்த ஒருவரின் கொலை தொடர்பாக மன்னாரைச் சேர்ந்த பார்த்தீபன் பரமலிங்கம் கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்படாமல் விடுவிக்கப்பட்டதாகவும், அச்சம்பவம் அரியாலை கோஸ்டியிடம் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியதாகவும் ஹில்டன் தன் வாதத்தைத் தொடர்ந்தார்.

### சின்னையா சதாசிவம் கடத்தல் :

அரியாலை கோஸ்டியின் நோக்கத்தைப் பற்றி குறிப்பிட்ட அரச தரப்புச் சட்டத்தரணி ஹில்டன் கடையில் வேலை செய்யும் சின்னையா சத்தியசிவம் வில்ஸ்டனில் வைத்து மாலை 9 மணியளவில் கடத்தப்பட்டு பரமலிங்கம் பார்த்தீபனின் முகவரியைக் கேட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். சுரேஸ்குமார் செல்வராஜா அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்படுவதற்கு 4 நாட்கள் முன்பாக ஏப்ரல் 18ம் திகதி சின்னையா சத்தியசிவம் கடத்தப்பட்டார். இவரைக் கடத்திச் சென்ற கோஸ்டித் தலைவன் ராகுல் தனது படுக்கையில் அவரை வீசி கறுப்புப் பிளாஸ்டிக் பைப்பால் அடித்து வதைத்து விட்டு தெருவோரத்தில் வீசிவிட்டு வந்ததாக ஹில்டன் யூரிகளுக்குத் தெரிவித்தார்.

### பார்த்திபனின் வீடு சுற்றி வளைப்பு :

இக்கடத்தல் இடம்பெற்று 3 நாட்களின் பின் பார்த்தீபன் பரமலிங்கத்தின் வீடு முற்றுகையிடப்பட்டது. முற்றுகையிட்டவர்கள் கல்லுகள் பொல்லு ஆகியவற்றை வைத்திருந்ததுடன் யன்னலை அடித்து நொருக்கியதாகவும் யூரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் அதில் ஒருவன் 'இன்று எனக்கு ஒரு துவக்கு வேணும்' என்று தனது கைத்தொலைபேசியில் கேட்டதாகவும் அங்கு சொல்லப்பட்டது. அத்தொலைபேசி இணைப்பின் சாட்சியம் கோஸ்டித் தலைவன் ராகுல் சச்சிதானந்தன், நாகராஜா சிவக்குமார், திருராஜ் கனகநாயகம் ஆகியோர் அப்பகுதியில் உலாவியதை உறுதிப்படுத்தியதாக ஹில்டன் நீதிமன்றத்திற்கு விளக்கினார்.

மேலும் இரண்டரை மணிநேரத்திற்குப் பின்னர் ஒரு வேட்டுத் தீர்க்கப்பட்டதாகவும் பின்னர் மறுநாள் அதிகாலை மற்றுமொரு வேட்டுத் தீர்க்கப்பட்டதாகவும் அது அயல்வீட்டுக்காரரின் வாயிலைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### கொலை வெறியுடன் காரில் துரத்திச் சென்றனர் :

வேட்டுக்கள் தீர்ந்து பின்னர் சற்று நேரம் சென்ற பின் மேலே குறிப்பிட்ட சந்தேக நபர்களுடன் கிருஷ்ணபிள்ளை (37) என்பவனும் இணைந்து பார்த்தீபன் பரமலிங்கத்தை காரில் துரத்திச் சென்றதாக நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது. வெம்பிளி றோட்டில் இந்த கோஸ்டி துரத்திச் சென்று பார்த்தீபன் பரமலிங்கத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். அச்சன்னம் பார்த்தீபன் பரமலிங்கத்தின் பிற்பகுதி கண்ணாடியை சேதப்படுத்தியதாக அங்கு கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து ராகுல் சச்சிதானந்தம் தனது கைத்தொலைபேசியில் பார்த்தீபன் பரமலிங்கத்துக்கு போன் செய்து 'அடுத்தது உன் தலைக்கு. யோசிக்காதை அடுத்த தடவை நிச்சயம்' என்று தெரிவித்துள்ளான்' என்று ஹில்டன் தன் வாதத்தை தொடர்ந்தார்.

### பார்த்தீபன் இல்லாததால் சுரேஸ்குமார் சுடப்பட்டார் :

பார்த்தீபன் பரமலிங்கத்தை காரில் துரத்திச் சென்ற ஐவரும் அதே தினம் சற்று தாமதமாக மாலை 8 மணி அளவில் அவருடைய வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டியதாகவும் பார்த்தீபன் பரமலிங்கத்தின் தாயார் திருமதி பரமலிங்கத்திடம் பார்த்தீபனை விசாரித்து உள்ளனர் என்றும் ஸில்டன் கூறினார். அத்தாயார் இல்லை என்று பதிலளிக்க அவரை தரையில் தள்ளி வீழ்த்தி விட்டு யன்னலை அடித்து நொறுக்கினர். தாயார் சமையலறையை நோக்கி ஓடினார். இரண்டு துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டது. சுரேஸ்குமார் செல்வராஜா மாடியை நோக்கிப் படிகளில் ஏறினார். ஆனால் இடையிலேயே சுருண்டு விழுந்து இறந்தார்.

மேலே இருந்து கீழே வந்த செல்லையா பரமலிங்கம் (பார்த்தீபனின் தந்தை) கீழே நால்வர் நிற்பதைக் கண்டார். அவர்களில் இருவர் துப்பாக்கியுடனும் ஒருவர் கிரிக்கற் பற்றுடனும் நின்றிருந்தனர். துப்பாக்கியுடன் வந்தவர்களில் ஒருவன் தந்தை செல்லையா பரமலிங்கத்தைச் சுடுவதற்காக குறிவைத்து விசையை அழுத்திய போது துப்பாக்கியின் குறி தவறியதால் அந்த நான்கு பிள்ளைகளின் தந்தை உயிர் தப்பியதாக அங்கு தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்தவர்கள் தப்பிச் சென்றனர்.

சுரேஸ்குமார் செல்வராஜாவின் மைத்துனர் பார்த்தீபன் பரமலிங்கம் (திருமதி சுரேஸ்குமாரின் சகோதரர்) என்பவரைத் தேடி வந்த ராகுல் தலைமையிலான அரியாலை கோஸ்டியே சுரேஸ்குமார் செல்வராஜாவை கடந்த ஆண்டு ஏப்ரல் 22ல் மார்பில் சுட்டுக்கொன்றது. தேடி வந்த பார்த்தீபன் பரமலிங்கம் வீட்டில் இல்லாததால் ஆத்திரத்தில் சுரேஸ்குமார் செல்வராஜாவை அக்கோஸ்டி சுட்டுக் கொன்றதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

### குற்றவாளிகள் அனைவரும் தண்டனைக்கு முந்திய அறிக்கைகளுக்காக (pre sentence reports) தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு உள்ளனர்.

2000ம் ஆண்டு முதல் தமிழ் இளைஞர்கள் மத்தியில் நடந்த பதிவு செய்யப்பட்ட 200க்கும் மேற்பட்ட குற்றச் செயல்களில் சில:

ஈஸ்றஹாம் - வெட்டு, குத்து காயங்களுடன் இளைஞர் மருத்துவமனையில். (ஏப்ரல் 2000)

சவுத்ஹோல் - 20 இளைஞர்கள் குழு மோதல் - இரத்த வெள்ளத்தில் இளைஞன். (23-25 மே 2000)

கவுன்ஸ்லோ - ஒருவரது மூக்கு வெட்டி துண்டாடப்பட்டது, மற்றயவருக்கு இடுப்பிலும் மார்பிலும் கத்திக்குத்து, மூன்றாமவர் தொண்டையில் இருந்து இடுப்பு வரை வெட்டிக் கிழிக்கப்பட்டார், நான்காமவர் தாக்கப்பட்டு துப்பாக்கியால் சுடப்பட்டார். தீபாவளிக் கொண்டாடத்தில் இது நடந்தது. (04 நவம்பர் 2000)

எட்மன்டன் - குமார் என்பவர் அவரது வீட்டில் படுக்கையில் கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்டார். (ஒக்ரோபர் 2000)

வெம்பிளி - நால்வர் கொண்ட குழு தாக்கி மார்பில் குத்தி அரவிந்தன் முத்துக்குமாரசாமியை கொலை செய்தனர். மேலும் நால்வர் படுகாயங்களுக்கு உள்ளாயினர். (17 யூன் 2001)

வோல்சிங்காம் - 15 - 30 இளைஞர்கள் வாள் பொல்லுகளுடன் மோதியதில் மூவர் படுகாயம் அடைந்தனர். ஒருவர் உயிராபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (15 யூலை 2001)

வோல்தம்ஸ்ரோ - கலை நிகழ்ச்சியில் குழு மோதல் ஒருவர் படுகாயமடைந்தார். வீதியில் கலைத்து கலைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒக்ரோபர் 2001)

மேற்கு இலண்டன் - பாலா என்பவர் படுகொலை செய்யப்பட்டார். (ஒக்ரோபர் 2001)

கிங்ஸ்பரி - சுபேந்திரன் ராமச்சந்திரன் அடித்து படுகாயப்படுத்தப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டார். (18 பெப்ரவரி 2002)

வெம்பிளி - சுரேஸ்குமார் செல்வராஜா அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். (22 ஏப்ரல் 2002)

இல்பேர்ட் - திலீபன் தங்கவடிவேல் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார். (19 மார்ச் 2003)

பார்த்தீபன் பாலசிங்கம் என்ற இளைஞர் வெம்பிளியிலும், கிசோக்குமார் பாலச்சந்திரன் என்ற இளைஞர் இல்பேர்ட்டிலும் ஒரு மணிநேர இடைவெளியில் கோரமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். (08 யூன் 2003)

இதற்கு முன்னரும் மார்ச் மாதம் வெம்பிளியில் இருந்த மைத்துனர் வீட்டுக்கு தனது வொல்ஸ்வகன் கொல்பில் சென்று கொண்டிருந்த பார்த்தீபன் பரமலிங்கத்தை வாள்கள், பொல்லுகளுடன் சென்ற ராகுல் தலைமையிலான அரியாலை கோஸ்டி துரத்தியதாகவும் பின்னர் பரமலிங்கம் பார்த்தீபன் வரும்வரை வீட்டுக்கு வெளியே அக்கோஸ்டி காத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. சில தினங்கள் பின்னர் 'நான் பாம்புக் கோஸ்டியில் இருந்து வந்திருக்கிறேன். நான் உன்னையும் உனது குடும்பத்தையும் உனது பொம்பிளையையும் சுட்டுக் கொல்வேன்' என ராகுல் மிரட்டியதாக அரசதரப்புச் சட்டத்தரணி தெரிவித்தார்.

* * *

# சட்டவிரோத விபச்சாரவிடுதிகள்

இளம்பெண்களை ஏமாற்றி கூட்டி வந்து விபச்சாரத்திற்கு உட்படுத்திய மூவர் கொண்ட குழு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். இலங்கையைச் சேர்ந்த பத்தினகே ரணசிங்கே(33) ரணசிங்கேயின் தாய்லாந்து மனைவி பூபா சவாடா(45) சவாடாவின் சகோதரி மொன்பொன் கக்ஸ் (40) ஆகியோரே இந்த விபச்சார மோசடியில் ஈடுபட்டனர். இந்த மோசடிக் கும்பல் பூபா சவாடா தலைமையில் நடந்து வந்தது. தாய்லாந்தில் இருந்து இளம் பெண்களை வேலை எடுத்துத்தருவதாக ஆசைகாட்டி இலண்டனுக்கு அழைத்து வந்து இங்கு விபச்சாரத்தில் ஈடுபடுத்தி உள்ளது இந்தக் கூட்டம்.

இலண்டனிலும் தாய்லாந்திலும் 20 விபச்சார விடுதிகளை இவர்கள் நடத்தி வந்துள்ளனர். இலண்டனில் மட்டும் இந்தக் கும்பலிடம் 40 இளம் பெண்கள் அடிமைப்பட்டு கிடந்தனர். இங்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் தங்களுக்கு விடுதலை வேண்டுமானால் இந்த எஜமானி உரிமையாளருக்கு £44,000 செலுத்த வேண்டுமாம். இந்த இளம் பெண்கள் இத்தொகையைச் செலுத்த தங்களுக்கு அறிமுகமில்லாத பலருடனும் 1,000 தடவைகள் வரை பாலியல் செயற்பாடுகளில் ஈடுபட வேணடும்.

16 வயதுச் சிறுமிகள் உட்பட பல இளம் பெண்களை பலியாக்கி 3 ஆண்டுகளாக இந்தக் கும்பல் இந்த மோசடியில் ஈடுபட்டு வந்து உள்ளது. இக்காலப்பகுதியில் இவர்கள் 3 மில்லியன் பவுண்களை ஈட்டி இருப்பார்கள் என காவல்துறையினர் மதிப்பிட்டு உள்ளனர்.

எட்டுமாத கால பொலிஸ் நடவடிக்கையின் பின்னர் இக்கும்பல் ஸ்கொட்லன்ட் யாட் பொலிஸாரிடம் மாட்டியது. புலனாய்வுப் பொலிஸார் மசாஜ் விளம்பரம் ஒன்றினைப் பார்த்து விபச்சார விடுதிக்கு சாதாரணமானவர்கள் போல சென்றனர். அங்கு £50 க்கு உறவுகொள்ள கேட்டுள்ளார்கள். பல்வேறு ஆதாரங்களுடன் பொலிஸார் இக்கும்பலை பிடித்தனர். ஆதாரங்கள் நிறைந்து இருந்ததால் அக்கும்பல் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

சவுத்வார்க் கிறவுன் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கில், ஈஸ்ற்ஹாமைச் சேர்ந்த சவாடாவிற்கு 5 ஆண்டுகளும், சகோதரிக்கு மூன்றரை ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களின் மோசடிக்கு ஒத்துழைத்து அதில் வாழ்ந்த ரணசிங்கேற்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

# அபராதம் கட்டாமல் டிமிக்கிவிட்டால் கார் தூக்கப்படும்

தலைநகரில் வாகனங்கள் நுழைவதற்கு அறவிடப்படும் கட்டணத்தை செலுத்தாமல் தொடர்ச்சியாக டிமிக்கி விடுபவர்களின் கார்களை தூக்க இலண்டன் போக்குவரத்து அமைப்பு திட்டமிடுகிறது. கட்டணம் அறவிட ஆரம்பிக்கப்பட்டு 3 மாதகாலத்தில் 92,000 அபராதங்கள் செலுத்தப்படாத நிலையில் இருப்பதாக இலண்டன் போக்குவரத்து அமைப்பு தெரிவிக்கிறது.

சாரதிகள் வேண்டுமென்றே கட்டணத்தைச் செலுத்தாமல் இருந்தால் தங்களுக்கு உள்ள முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி காரை தூக்கிச் செல்வோம் என அதிகாரிகள் எச்சரித்து உள்ளனர். சிலர் தமது வானங்கள் பழுதடைந்த நிலையில் இழுத்துச் சென்றதாக டிமிக்கி விட்டுள்ளார்களாம்.

கட்டணம் செலுத்தாமல் டிமிக்கி விடும் கார்களைத் தூக்கி வந்து நிறுத்த 200 கார்களை நிறுத்தும் வசதி கொண்ட கார் பார்க் ஒன்று உவைற் சிற்றியில் 5 ஆண்டு குத்தகைக்கு எடுக்கப்பட்டு உள்ளது. 60 ஊழியர்கள் டிமிக்கிவிட்ட கார்களைத் தேடி தலைநகர வீதியில் உலாவர உள்ளனர்.

£80 அபராதங்கள் 3 அல்லது அதற்கு மேல் கட்டாதவர்களின் வாகனங்கள் சில தினங்களிலேயே இழுத்துச் செல்லப்படும் அபாயம் உள்ளது. அவ்வாறு இழுத்துச் செல்லப்படும் வாகனத்தை வெளியே எடுக்க £1000 வரை செலுத்த வேண்டி இருக்கும். இழுத்துச் செல்லும் வாகனத்தை விடுவிக்க £485 பவுண் வேண்டும். வாகனத்தை விடுவிக்க மூன்று கட்டணங்களையும் (ஒரு மாதத்திற்கு மேல் கட்டணம் செலுத்தாவிட்டால் £125) செலுத்த வேண்டும். விடுவிக்கும் கட்டணம் £125. மேலும் வாகனத்தின் பார்க்கிங் கட்டணம் நாளுக்கு £15. ஆறு வாரங்களுக்குள் உரிமை கோரப்படாத வாகனங்கள் ஏலத்தில் விடப்படும் அல்லது நொருக்கப்படும். இந்தப் புதிய நடவடிக்கைக்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் விரைவில் அறிவிக்கப்படும் என இலண்டன் போக்குவரத்து அமைப்பு நம்பிக்கை வெளியிட்டு உள்ளது.

# 200,000 பிரித்தானிய கடவுச்சீட்டுகள் களவாடப்படுகிறது அல்லது தொலைகிறது

களவாடப்படும் அல்லது தொலைந்து போகும் பிரித்தானியக் கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை ரொக்கட் வேகத்தில் அதிகரித்து உள்ளது. களவாடப்பட்ட அல்லது காணாமல் போன கடவுச்சீட்டுகள் 1998ல் 31,000இல் இருந்து 2002ல் 166,358 ஆக அதிகரித்து உள்ளது. இவ்வெண்ணிக்கை இவ்வாண்டு 200,000 ஆக அதிகரிக்க உள்ளது. இதன்படி நாளொன்றுக்கு 550 கடவுச்சீட்டுகள் காணாமல் போகிறது அல்லது தொலைந்து போகிறது.

ஆயிரக்கணக்கான கடவுச்சீட்டுகள் குற்றவாளிகளினதும் பயங்கரவாதிகளினதும் கைகளைச் சென்றடைவதாக பொலிஸாரும் குடிவரவு அதிகாரிகளும் அஞ்சுகின்றனர். சட்டவிரோதமாக குடிவரவும் தஞ்ச மோசடிகளுக்கும் இக்கடவுச்சீட்டுகள் பயன்படுத்தப்படுகின்றது.

திட்டமிட்ட குடிவரவு மோசடிகளால் பிரித்தானியா பெருமளவில் பாதிக்கப்படுவதாக லிபிரல் டெமொகிரட் பா உ சைமன் கியுச் தெரிவிக்கிறார். கள்ளக் கடவுச்சீட்டுகளுடன் 10,000 பேர்வரை பிரித்தானிய நுழைவாயில்களில் கடந்த ஆண்டு மாட்டி உள்ளனர். இது அதற்கு முன்னைய ஆண்டைக் காட்டிலும் 50 வீதம் வரை அதிகரித்து உள்ளது.

தம் கடவுச்சீட்டுகள் தொலைந்ததாகக் குறிப்பிட்டுவிட்டு சிலர் அதனை மோசடிக் குழுக்களுக்கு விற்பனை செய்வதாகவும் இந்தக் குழுக்கள் கடவுச்சீட்டை அண்ணளவாக £3,000 ற்கு விற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

We are a specialist Criminal Firm
24 Hour
POLICE STATION EMERGENCY SERVICE
JUNG & CO
SOLICITORS
41 NORTH ROAD, SOUTHALL, MIDDX. UB1 2JL
TEL: 020 8813 8996 Fax: 020 8813 8559
EMERGENCY Nos. 07956 279 170
07956 867 370
We can also assist with:
Family - Wills & Probate - Conveyancing

SRIHARANS SOLICITORS
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

நஷ்டஈடு கோர
Insurance Claims
NO WIN - NO FEE
களவு, நெருப்பு, வெள்ளம், நீர்ச்சேதம் இவைகள் மூலம் ஏற்பட்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்ய மேலதிக விவரங்களுக்கு நாடுங்கள்
Pearsons
0800 3898 102

WARAN & COMPANY SOLICITORS
Commissioners of Oath
Specialists in:
* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing
Call Mr. S. K. Nageswaran LLB
Mrs. P. Nageswaran LLB (Hons.), LLB (Lon)
on
Tel: 020 8808 2397
583 High Road, Tottenham, London N17 9SY Fax: 020 8801 8818

Genga & Co.
Solicitors
Administor of Oaths
Legal Aid Francise for Crime and Immigration
Specialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court
தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு குற்றவியல் வழக்குகள்"
"மஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், பொலிஸ்நிலையம்"
எந்தவிதமான அவசர தேவைக்கும் 24 மணித்தியால தொடர்பு இலக்கம்
Genga & Co.
1st & 2nd Floor
588 High Road Wembley
Middx. HA0 2AF
07956 569 559
Tel: 020 8795 5020
Fax: 020 8795 5030

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

உங்களின் வரி விளம்பரங்களுக்கு
உதயன் 020 8952 5677

Thompson & Co.
Solicitors
Legal Aid for
* Immigration
* Employment
* Criminal Law
* Also Property & Family Law
Tel: 020 8767 5005
48A Tooting High Street
(Opposite Broadway Station)
London SW17 0RG
Email: mail@thompsonlaw.co.uk

EMPLOYMENT CLAIMS
NO WIN NO FEE
We act for Employers and Employees on NO WIN NO FEE basis the following matters
Unfair Dismissal, Racial Discrimination, Sexual Discrimination, Denial of Promotion, Underpayment, Denial of Holiday pay/sick pay/ maternity leave/minimum pay and related issues
Contact Mr. Das on 0790323597/07958618106
MARKANDAN & Co.
Thamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
email: mm@markandan-solicitors.co.uk

New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

Thana & Dev
Solicitors & Administrators of Oaths
முன்னாள் THANA & CO தற்போது Thana & Dev சட்ட நிறுவனம் ஆக புதிய முகவரியில் இயங்குகின்றது.
* Immigration/Work Permit
* House/Shops Buy/Sale/Let
Call us
020 8521 4686
07976 660 635 (24 hrs)
10 Hoe Street, Walthamstow, London E17 4PH

# சட்ட உதவியை கட்டுப்படுத்த அரசு முயற்சி

சட்ட உதவிக்கு வழங்கப்படும் £2 பில்லியன் உதவியைக் குறைப்பதற்கு அரசு முயற்சிக்கிறது. அரசாங்கம் சட்ட உதவிக்கு செலவிடும் தொகை கடந்த 5 ஆண்டுகளில் £1.5 பில்லியனில் (1997) இருந்து £1.9 பில்லியனாக உயர்ந்து உள்ளது. இந்த செலவுக் குறைப்பு முயற்சியில் தஞ்சம் மற்றும் குடிவரவு தொடர்பான வழக்குகளுக்கு வழங்கப்படும் சட்ட உதவி மேலும் கடுமையாக்கப்பட்டு உள்ளது. தஞ்சம் மற்றும் குடிவரவிற்கு ஆண்டுக்கு £175 மில்லியன் செலவிடப்படுகிறது. சிவில் விடயங்களுக்கு £800 மில்லியன் செலவிடப்படுகிறது.

சட்ட உதவிக்கு செலவிடப்படும் தொகையை ஆண்டுக்கு £150 மில்லியனால் குறைக்க உள்ளதாக லோட் சான்ஸ்லர் அலுவலகம் தெரிவிக்கிறது. செலுத்தும் பணத்திற்கு சரியான பெறுமதியான சேவையைப் பெற வேண்டும் என்று தெரிவிக்கிறார் சட்ட உதவி அமைச்சர் பொரனஸ் ஸகொட்லண்ட். இவ்வுதவிக் குறைப்புத் திட்டம் தஞ்சம் கோருவோர்களுக்கு உதவி கிடைப்பதைத் தடுக்கும் என மனித உரிமை அமைப்புகள் அச்சம் தெரிவித்து உள்ளன. ஆனால் அதனை அமைச்சர் முற்றாக நிராகரித்து உள்ளார்.

# குற்றவாளிகளின் பணம் பாதிக்கப்பட்டவர்களுக்கு

நிருபிக்கப்பட்ட குற்றவாளிகளிடம் இருந்து கைப்பற்றப்படும் வசூலிக்கப்படும் £1.5 மில்லியன் பணம் சமூகத்திற்கே வழங்கப்பட இருப்பதாக உள்துறை அலுவலக அமைச்சர் கரொலைன் பிலைன்ற் யூலை 21ல் அறிவித்து உள்ளார். துப்பாக்கி குற்றங்களுக்கு எதிரான ஆயுதங்களை களையும் அறக்கட்டளை (Disarm Trust) ஏற்பாடு செய்திருந்த மாநாட்டிலேயே கரொலைன் இதனைத் தெரிவித்தார். இப்பணம் சமூகத்தில் காணப்படும் துப்பாக்கி குற்றங்களை கையாளப் பயன்படுத்தப்பட உள்ளது. இதன் படி துப்பாக்கி குற்றங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட இலண்டன் பகுதிக்கு £400,000 வழங்கப்பட உள்ளது.

மேலும் ஆயுதங்களை களையும் அறக்கட்டளைக்கு £300,000 இப்பணத்தில் இருந்து வழங்கப்பட இருக்கிறது. இப்பணம் பிரதேச சமூக அளவில் துப்பாக்கி வன்முறைக்கு எதிரான செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. மேலும் துப்பாக்கி வன்முறைக்கு எதிராக கீழ்மட்டத்தில் எடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்பட இருக்கிறது.

'காடையர் குழுக்களுடன் தொடர்புடைய இளம் வயதினர் தங்களுக்கு மதிப்பை பெறுவதற்காக துப்பாக்கிகளை நாடுவது அதிகரித்துள்ளது' என அமைச்சர் கரொலைன் தனது பேச்சில் தெரிவித்தார். தற்போது சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருந்த குற்றத்திற்கு ஒருவரிற்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை வழங்க முடியும்.

# நவீன சற்லைட் தொழில் நுட்பம்

தலைநகருக்குள் நூழையும் வாகனங்களை சரியாக மையப்படுத்த நவீன Glopal Positioning System வேண்டும் என இலண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டன் விரும்புகிறார். தற்போதுள்ள தொழில்நுட்பம் 80 வீதமே வினைத்திறனுடையது என்றும் நவீன முறை மிகவும் நுட்பமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இது நடைமுறைக்கு கொண்டு வரப்படும் பட்சத்தில் தலைநகரின் கட்டண எல்லை விரிவுபடுத்தப்படலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

# மூன்று இலட்சம் ரூபாய் நூல்கள் யாழ் செல்கிறது

மூன்று இலட்சம் ரூபாய்க்கும் மேல் பெறுமானமுள்ள புதிய நூல்கள் யாழ் நூலகம் நோக்கி செல்கிறது. இலண்டனில் உள்ள யாழ் நூலக நண்பர்கள் வட்டத்தினால் இந்நூல்கள் யாழ் நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. ஓகஸ்ட் 9ல் புறப்படும் கப்பல் ஓகஸ்ட் 28ல் கொழும்பு சென்றடையும். அங்கிருந்து யாழ் நூலகத்திற்கு நூல்கள் எடுத்துச் செல்லப்படும்.

நூல் பகுப்பாக்கம் தொடர்பாக கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகம் அன்பளிப்புச் செய்த நூல்களும் புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் அன்பளிப்புச் செய்த அவர்களுடைய நூல்களுமே அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. மேலும் ருத்திரமாணிக்கம் குடும்பத்தினர் பல நூல்களை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளனர். இந்நூல்களின் தேவை பற்றி யாழ் மாநாகர ஆணையாளரும் யாழ் நூலகரும் விடுத்த வேண்டுகோளை அடுத்தே யாழ் நூலக நண்பர் வட்டம் இந்த முயற்சியை மேற்கொண்டிருந்தது.

ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் உலக அளவில் புலம்பெயர்ந்து வாழ்ந்த போதும் அவர்களுடைய நூற்றுக்கணக்கான படைப்புகள் வெளிவந்த போதும் யாழ் நூலகத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய படைப்புகளே இருப்பதாக நூலக வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. அனுப்பப்பட்ட இந்நூல்கள் அங்கு சென்றடைந்ததும் இந்தக் குறை ஓரளவு தீர்க்கப்படும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் நூல்களை வெளியிடும் போது அதில் 5 பிரதிகளை யாழ் நூலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்; என யாழ் நூலக நிர்வாகம் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களை கேட்டுக் கொண்டு உள்ளது.

அனுப்பும் செலவை தவிர்க்க விரும்பினால் இலண்டனில் உள்ள யாழ் நூலக நண்பர்கள் வட்டத்தினருடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் கையளிக்கலாம். 2004 மார்ச்சில் அடுத்த தொகுதி நூல்களை அனுப்பத் திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கு முன்னரும் இருதடவைகள் யாழ் நூலக நண்பர்கள் வட்டத்தினால் நூல்கள் அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# £6 மில்லியன் பவுண் கிறடிட் காட் மோசடி

## மட்டை போட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கைது

கிறடிற் காட் மோசடியில் ஈடுபட்டு £6.35 மில்லியன் பவுண்களை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்களும் அவர்களில் ஒருவருடைய மனைவியும் கைது செய்யப்பட்டனர். வடக்கு இலண்டனின் கொலின்டேல், வெம்பிளி, எட்ச்வெயர் ஆகிய பகுதிகளில் இருந்த வீடுகளில் இருந்து இவர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். திட்டமிட்ட கிறடிட் காட் மற்றும் காசோலை மோசடி குற்றத் தடுப்புப் பிரிவு Dedicated Cheque and Plastic Crime Unit - DCPCU அதிகாரிகள் நான்கு பிரதான வங்கிகளில் இருந்து கிடைத்த தகவலை வைத்து இந்தக் கைதுகளை மேற்கொண்டு உள்ளனர். கைது செய்யப்பட்ட ஐவரில் ஜெகா, பத்து, கௌசி, சதீஸ் என நால்வரது சுருக்கப் பெயர்கள் அறியப்பட்டு உள்ளது.

விசாரணைகளின் பின்னர் ஐவரும் பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளனர். செப்ரம்பர் மாதம் மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் வெவ்வேறு பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு உள்ளனர். இவ்வளவு பெரும் தொகையில் கிறடிற்காட் மோசடியில் தமிழர்கள் சம்பந்தப்பட்டு இருப்பது இதுவே முதற்தடவையாகும். மேலும் ஒரு தமிழ்ப் பெண் கிறடிட் காட் மோசடியில் கைதாகி இருப்பதுவும் இதுவே முதற் தடவை எனத் தெரியவருகிறது.

கிறடிற் காட் மோசடி பற்றி காவல்துறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க விரும்புபவர்கள் இதில் உள்ள தொடர்பாடல்களை பயன்படுத்தி அறிவிக்கலாம். 0207 382 2960 or dcpcu@dcpcu.org.uk or Crimestoppers - 0800 555 111

### குற்றவியல் பரிசோதனை:

இச்சகோதரர்களுக்கு சொந்தமான 4 நியூ ஜேர்சி சிக்கின் New Jersey Chicken என்ற துரித உணவு நிலையங்கள் பொலிஸாரின் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. இங்கிருந்து கணனிகள், பிரதி செய்யப்பட்ட 100 கிறடிற் காட்கள், கடிதங்கள், வங்கி கணக்குகள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு குற்றவியல் பரிசோதனைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டது. இவர்களுக்குச் சொந்தமான 6 கடைகளில் கொலின்டேல், வெம்பிளி, எட்ச்வெயர், கென்டன் ஆகிய இடங்களில் இருந்த 4 கடைகளை பொலிஸார் அடைத்தனர். யூலை 28ல் மீண்டும் இக்கடைகள் திறக்கப்பட்டது. வட்பேர்ட், வில்சன்கிறீன் ஆகிய இடங்களில் இருந்த கடைகள் சோதனைகளில் இருந்து தப்பியதாக தெரியவருகிறது.

### குடும்பமும் சொத்தும்:

யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த இக்குடும்பத்தினர் அனைவருமே பிரித்தானியாவிற்கு தொண்ணூறுக்களின் பின்னர் தஞ்சம் கோரி ஐரோப்பாவிற்கு புலம்பெயர்ந்துள்ளனர் என வேலணையைச் சேர்ந்த ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். பின்னர் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் இருந்து இவர்கள் இலண்டனுக்கு வந்து சேர்ந்தனர் என்றும் இவர்களது தாய், தகப்பனும் வடக்கு இலண்டனிலேயே வாழ்வதாகவும் அந்த வேலணை வாசி தெரிவித்தார்.

அக்குடும்பத்தில் 25 முதல் 35 வயதுக்கு இடைப்பட்ட ஆறிற்கும் மேற்பட்ட சகோதரர்கள் உள்ளனர் என்றும் தெரியவருகிறது. இரு மாதங்களிற்கு முன்னர் ஒரு சகோதரருடைய குழந்தையின் பிறந்த தினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவர்களுக்கு வடக்கு இலண்டனில், ஒரு தெருவிலேயே 11 வீடுகள் இருக்கின்றன என்றும் தெரியவருகிறது. இவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்னரேயே இவர்களை அறிந்திருந்தவர்கள் இவர்கள் மீது சந்தேகம் கொண்டிருந்தனர்.

### வேலைப் பின்னணி:

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் ஏற்கனவே தங்கள் வேலைகளில் இருந்து நிறுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒருவர் சிக்கின் கடையில் வேலை செய்து கொண்டிருந்த போது வேலை நீக்கம் செய்யப்பட்டார். மற்றையவர் பட்ஜன்ஸ் சுப்பர் மாக்கற்றில் இருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

### மோசடிகள்:

கைது செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அப்பகுதியில் உள்ள அஸ்டா சுப்பர் மார்க்கற்றில் £1,000 வரை விலையுயர்ந்த பொருட்களை கொள்வனவு செய்துள்ளனர். இவர்கள் மீது சந்தேகம் கொண்ட நிலையக் காவலாளி பொலிஸாரிற்கு தகவல் கொடுத்ததை அடுத்து, அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் ஒரு சகோதரரை விசாரித்துச் சென்றனர். அச்சந்தர்ப்பத்தில் கைது செய்யப்படவில்லை. இவர்கள் பிரதி செய்யப்பட்ட அல்லது coloned or counterfeit கிறடிட் காட்கள் மூலம் விலையுயர்ந்த கார்களை வாங்கி மிகவும் மலிந்த விலையில் விற்றுவந்தமையும் தற்போது தெரிய வந்து உள்ளது. கொள்ளையடித்த கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கவும் மேலும் மேலும் கொள்ளையடிக்கவும் சிக்கின் கடைகள் பயன்படுத்தப்பட்டு உள்ளதாக ஊகிக்கப்படுகிறது.

### வங்கிகள்

98 வங்கிக் கணக்குகளில் இருந்து கடந்த நான்கு ஆண்டுகளாக இவர்கள் மோசடிகளில் ஈடுபட்டு உள்ளனர். கடந்த ஒரு வருடமாக இவர்களது செயற்பாடுகள் தீவிரம் அடைந்திருந்தது. இந்த மோசடியால் HSBC வங்கியே மிகவும் நட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. வங்கிகள் கொடுத்த துப்பை வைத்தே பொலிசார் கைதுகளை மேற்கொண்டனர்.

'மிகவும் நுணுக்கமாகச் செயற்பட்டு வங்கிகளில் இருந்து பணத்தைக் களவாடிய குழுவின் செயற்பாடுகளை நாம் குழப்பி உள்ளோம்' என்று குறிப்பிட்டார் விசேட பிரிவின் புலனாய்வு அதிகாரி பொப் குர். அவர் மேலும் தெரிவிக்கையில் இப்படியான குற்றவாளிகளின் வாழ்க்கையை அனுமதிக்க மாட்டோம் என உறுதியுடன் தெரிவித்தார்.




Jyoti Jewellers
NEWLY OPEN
We have religious Articles, Goddess Idle and many more in pure Sterling Silver




*Unbeatable Price*
Why not call in
020 8204 7483
519, Kingsbury Road, London NW9

# TR-TEC மீதான விசாரணைகள் இறுதிக் கட்டத்தில்

தர்மஸ்தாபனங்களின் ஆணைக்குழுவினால் TR-TEC மீது நடத்தப்பட்டு வரும் விசாரணைகள் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும் விசாரணைகள் ஓகஸ்ட் இறுதிப் பகுதியில் முடிவடையும் எனவும் இவ் விசாரணைக்கான பொறுப்பதிகாரி பரி கிறீனி உதயனுக்குத் தெரிவித்தார். விசாரணை முடிவடைந்து 2 மாதங்களில் அதாவது ஒக்ரோபரில் விசாரணைகளின் முழு விபரங்களும் வெளியிடப்படும் எனவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார். ஓகஸ்ட் 10ம் திகதி விசாரணையை மேற்கொண்டு வரும் அலுவலர் பரி கிறீனி சம்பந்தப்பட்ட சிலருடன் தொடர்பு கொண்டு சில ஆவணங்களைக் கேட்டு உள்ளார்.

TR-TEC ன் அங்கமான LCT யை களவாட முயற்சித்தது, பண ஊழல், நிர்வாக ஊழல், அறக்கட்டளை உறுப்பினர்கள் முகாமையாளர் சிறிதரனால் நியமிக்கப்பட்ட உறவினர்கள் நண்பர்கள் என முகாமையாளர் சிறீதரன் மீதும் அறக்கட்டளை நிர்வாகம் மீதும் தர்மஸ் தாபனங்களின் ஆணைக் குழுவிற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டதை அடுத்தே இவ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது.



முகாமையாளர் அ சிறிதரன்

கடந்த ஆண்டு நடுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் தற்போது ஒரு ஆண்டு நிறைவடைந்த நிலையிலும் முழுமை அடையாமல் தொடர்கிறது. ஆரம்பத்தில் இவ்விசாரணையை அனிதா கெலி என்பவர் மேற்கொண்டு இருந்தார் பின்னர் ஆம்ஸ்ரோங் என்பவர் விசாரணைகளை மேற்கொண்டார். தற்போது மூன்றாவதாக பரி கிறீனி விசாரணகளின் இறுதிக் கட்டத்தை மேற்கொண்டு உள்ளார்.

**விசாரணைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் :**

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு 14 மாத கால இடைவெளியில் TR-TEC ல் பல மாற்றங்கள் நடைபெற்று உள்ளது. TR-TEC ல் இருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட திருமாறன், முகாமையாளர் அ சிறிதரன் தன்னை வேலைநீக்கம் செய்தது அநீதியானது என்று கூறி TR-TEC ற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொண்டார். தொழில் உரிமைகள் சட்டத்தில் முன்னணி வகிக்கும் சட்டத்தரணி ரங்கன் திருமாறனை பிரதிநிதித்துவப்படுத்தி, திருமாறனுக்கு இழைக்கப்பட்ட அநீதியை நிரூபித்து திருமாறனுக்கு நட்டஈடும் பெற்றுக் கொடுத்தார்.

TR-TEC ன் செயலாளர் ரி ஜீவரட்ணம் அப்பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டதுடன் அவரது உறுப்புரிமையும் பறிக்கப்பட்டது.

TR-TEC ன் பொருளாளர் மு கனகராஜா அமைப்பின் கணக்கு வழக்குகள் தனக்குக் காட்டப்படுவதில்லை என்றும் அமைப்பில் தில்லுமுல்லுகள் இடம்பெறுவதாகவும் கூறி தனது பதவியில் இருந்து விலகியதுடன் உறுப்புரிமையையும் விலத்திக் கொண்டார். TR-TEC மீதான குற்றச்சாட்டுகள் வலுவடைந்த நிலையில் கனகராஜாவை அடுத்து அறக்கட்டளையின் மற்றுமொரு உறுப்பினர் மாசிலாமணி உறுப்புரிமையை விலத்திக் கொண்டார்.

அ சிறிதரன், ந ரகுநாதன் அகியோர் LCT ல் வகித்த பதவிகளில் இருந்து விலக வேண்டும் என்றும் அ சிறிதரன் முறைப்படி கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் கடந்த ஆண்டு யூலை 5ல் நடந்த ஆரம்ப கட்ட விசாரணைகளின் முடிவில் தெரிவிக்கப்பட்டது. மேலும் தொழில் நீதிமன்றத்திலும் TR-TEC ன் நிர்வாக ஒழுங்கீனங்கள் அம்பலப்படுத்தப்பட்டது. அதனை அடுத்து முகாமையாளர் சிறிதரனின் நிர்வாகமும் அறக்கட்டளை நிர்வாகமும் மாற்றப்பட வேண்டும் என்று பரவலாக கோரப்பட்டது.

ஒரு பதவியில் இருந்தவர் இன்னொரு பதவிக்கு மாற்றப்பட்டாரே ஒழிய குறிப்பிடத்தக்க எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. இந்நிலையில் வெளிவர உள்ள முழுமையான விசாரணை முடிவுகள் பல அறிவுறுத்தல்களை TR-TEC க்கு வழங்கும் என்று தெரியவருகிறது. ஏற்கனவே TR-TEC ன் செயற்பாடுகளில் ஆணைக்குழு தலையீடுகளை மேற்கொண்டு உள்ளது என்றும் விளக்கங்கள் கோருவதாகவும் அங்கு பணியில் உள்ளவர் உதயனுக்குத் தெரிவித்தார். மேலும் ரி ஜீவரட்ணம் பதவியிலும் உறுப்புரிமையிலும் இருந்து தூக்கி வீசப்பட்டது முக்கிய விடயமாக அமைய உள்ளது. முக்கியமாக LCT யை தனி அமைப்பாக பிரித்து தனியார் சொத்தாக்குவது முற்றிலும் தடுக்கப்படும் என்ற உறுதியை குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களுக்கு ஆணைக்குழு வழங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. விசாரணை முடிவறிக்கை வெளியானதும் அது முழுமையாக உதயன் வாசகர்களுக்கு அறியப்படுத்தப்படும்.

CEYLON SUPER STORE
புதிய தமிழ்க்கடை
Grocers & Convenience Store
அ: அரிசி மா
ஆ: ஆட்டாமா
இ: அட்டவிசட்டி
என A to Z போல்
Harrow மாநகரில்
நாடவேண்டிய இடம்
Ceylon Superstore
308 East Cote Lane, South Harrow, HA2 9AH
Tel: 020 8 423 3444

WEMBLEY CARS
24 Hour - 7 Seater
020 8902 0123
All cars fully insured
Wembley's longest running company
எமது கம்பனிக்கு முழு (அ) பகுதி நேர
வாகன சாரதிகள் தேவை.
வாரம் £500 மேல் கிடைக்கும்.
அஜிலன் 07799 472 550

KS SATELLITE LTD.
Specialists in Satellite Installation
Wholesale & Retail
Deepam, TTN, Sun TV, Jaya TV, Sky Digital, Guru Maharaj, CCTV & Home Cinema and Plasma TV
Open 7 Days a week
Tel: 020 8597 2005
Mob: 07956 166 847
747, Eastern Ave., Newbury Park, Ilford IG2 7RT

LIGHTSTARS
YOUR LOCAL COMPUTERS SHOP
COMPUTERS FROM £399
COMPUTERS & ACCESSORIES AT LOW PRICES
SALES / SERVICES / UPGRADES / REPAIRS
WE SELL IBM C'OMPAQ, HP, LEXMARK, ETC..
SAVE ££££
COMPUTER CLASSES ALSO AVAILABLE
CALL US ON 0208 905 7390
இது ஒரு தமிழ் நிறுவனம்

LISA TIMBER LTD.
Importers of Hardwood & Parquet Flooring
REAL WOOD FLOORING AT DISCOUNTED PRICE
Call
020 8961 9030
Unit 40, Cumberland Business Park, Cumberland Avenue, Park Royal NW10 7RX

# மறைந்த தலைவருக்கு நினைவுகூரல்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த தலைவர் மு சிவசிதம்பரத்தின் நினைவுரைகள் ஓகஸ்ட் 10ல் இடம்பெற உள்ளது. 1989ல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மயிரிழையில் உயிர் தப்பிய இவர் கடந்த ஆண்டு காலமானார். 89 துப்பாக்கிச் சூட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான அ அமிர்தலிங்கமும், கூட்டணியின் முக்கிய உறுப்பினர் யோகேஸ்வரனும் கொல்லப்பட்டனர். இந்தியன் வை எம் சி எ இன் மகாத்மா நினைவு மண்டபத்தில் இந்நிகழ்வு மாலை 5.30ற்கு இடம்பெற உள்ளது.



மறைந்த தலைவர் சிவசிதம்பரம்

தற்போது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தலைமைப் பிரச்சினை ஏற்பட்டு உள்ள நிலையில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியில் சம்பந்தன் போன்றவர்கள் விடுதலைப் புலிகளுக்கு சார்பான நிலைப்பாட்டில் உள்ளனர். ஆனால் கூட்டணியின் தற்போதைய தலைவர் ஆனந்தசங்கரி விடுதலைப் புலிகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இல்லை. அவர் கூட்டணியின் தனித்துவத்தை தக்க வைக்கவும் தனது தலைமையை பாதுகாக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளார். கூட்டணியின் இலண்டன் கிளை ஆனந்தசங்கரிக்கு ஆதரவாகவே இருந்து வருகிறது.

# HARTEX

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

- COMBAT
- PULLOVERS
- MAP CASES
- THERMAL UNDERWEAR
- COMPRESSORS BAGS
- RAINWEAR
- BODY WARMERS
- SHORTS
- MONEY BELTS
- CLOTHING
- BOOTS
- COOKWARE
- CUTLERY SETS
- HIKING BOOTS
- HAMMOCKS
- PLATES
- WEBBING
- GLOVES
- HEADWEAR
- HIKING BOOTS



Competitive prices

55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS



# MULTILINES LIMITED

Designer Bedrooms / Kitchens & Shopfitters

- DESIGNER BEDROOMS
- KITCHENS
- LOUNGE UNITS
- HOME-STUDY
- TRADITIONAL INDIAN SEATING
- MANDIRS
- BEDS



DELIVERY OF PRODUCTS ONLY WITHIN M25
Unit 1, 255 Water Road, Abbeydale Industrial Estate, Wembley, Middx. HA0 1JW
Tel: 020 8997 7788 Fax: 020 8997 9988
E mail: info@multilines.co.uk, Web: www.multilines.co.uk

* * * * * * * * * * * *

## Highlife Construction Ltd

Loft Conversions/Rear Extensions for life and General Building Works

Contact: Siva

Mobile: 07710 505 437

77 Herent Drive
Ilford Essex IG5 OHF

## Creative Curtains (LONDON) Ltd.

Made to Measure Service for Curtains & Blinds

Contact Dee Dee
Tel: 020 574 2156
Mobile: 07780 572 429
15 Witley Ind. Est. Witley Gardens,
Southall UB2 4EZ

## TRAVLIN STYLE

Low Cost flights / Hotel / Insurance to all Destinations

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA | £349 | CANADA | £245 | COLOMBO | £365 |
| DUBAI | £250 | NAIROBI | £325 | SOUTH AFRICA | £335 |
| NEWYORK | £145 | ORLANDO | £200 | PARIS | £49 |
| | | LISBON | £120 | | |

All Prices are subject to availability and Airport Taxes. Special Discount to Senior Citizens and Groups to India.
Travelin Style Ltd. 46 Church Road, Stanmore, Middx.HA4 4AH
Tel: 020 8954 0077
Retail agents for Atol holders

## NESAN Cash & Carry

NEWLY OPENED

MANY OPENING OFFERS

- இலங்கை மரக்கறி வகைகள், நிரு. மாழினி, லீலா, TRS தயாரிப்புகள், சமுத்திரா, மாழினி கடல் உணவுகள் மாவும் குறைந்த விலையிலும்
- திருமண ஆடை அலங்காரங்கள் வாடகைக்கும்
- மேலும் பிரதி வாரமும் அதிவிசேட விலைக்கழிவில் பொருட்களும் உண்டு

SPECIAL OFFERS EACH WEEK

* ஓடியோ கேஸட், C.Dக்கள் விற்பனைக்கும் உண்டு

வாருங்கள்

Tel: 020 8574 4018
217 The Broadway Southall

நாளொன்றிற்கு £25 வீதம் மாதம் 6 நாட்கள் வரை நிரந்தரமாக வேலை வேண்டுமா?

020 8952 5677

## Euro Glazing

Service Value Quality

Windows, Doors, Porches, Conservatories

உயர்ந்த தரம், நிறைந்த சேவை மற்றும் மிகுந்த சேமிப்புக்கு நாடுங்கள்
020 8574 9494



We give guarantee for our quality products ranges we supply.
Our professional staffs are highly skilled to fit Windows, Doors, Porches, Conservatories..
Just one call away to make your home complete
Unit 7, Barrett Industrial Park, Park Avenue, Southall, Middlesex UB1 3AF
Tel: 020 8574 9494 Fax: 020 8574 8989

## DUBAI SPECIAL OFFERS

3 NIGHTS OFFERS
- 3★ Golden Sands Apts. £299
- 4★ Oasis Beach Resort £354
- 5★ Taj Palace £354
- 5★ Jumeirah Beach £439

7 NIGHTS OFFERS
- 4★ Metropolitan City £364 Beach Access
- 5★ Jebel Ali £439

Inc Flights, Transfers & Breakfast (not inc Golden Sands). Limited availability. Conditions apply. Departures upto 24 AUG.

www.traveldubai.co.uk

## AIR TRAVEL Corporation

0870 748 7474
www.airtravelcorp.co.uk

## WORLDWIDE FLIGHTS

| | | | |
|---|---|---|---|
| Madras | £419 | Columbo | £364 |
| New York | £234 | Mumbai | £319 |
| Orlando | £419 | Nairobi | £399 |
| Los Angeles | £379 | Singapore | £369 |

CALL FOR OTHER DESINATIONS
Plus taxes. Early July Departures. Limited availability. Conditions apply.

Air Travel Corporation, Hammond House, 2 Bonnersfield Lane, Harrow, Middlesex HA1 2JR. sales@airtravelcorp.co.uk www.airtravelcorp.co.uk Agents for ATOL protected holders. TTA: R454X